Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 22 ஞாயிற்றுக்கிழமை (07.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 341

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

## ஜப்பானிய பிரதமரின் விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது

### அகாஷியுடனான சந்திப்பில் ஜனாதிபதி



25 வருடங்களுக்குப் பின்னர் ஜப்பானிய பிரதமரொருவர் இலங்கைக்கு இன்றைய தினம் விஜயம் செய்வதானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூஷி அகாசியுடன் நேற்று மாலை அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜப்பானிய பிரதமர் சின்சோ அபே இன்றைய தினம் இலங்கைக்கு விஜயம் செய்வது மிகவும முக்கியத்துவம் வாந்ததது. அத்துடன் இலங்கை தொடர்பாக ஜப்பான் கொண்டுள்ள புரிந்துணர்வை இது வெளிப்படுத்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## தேசிய பாதுகாப்பு விடயங்களில் மாகாணசபைகள் தலையிடமுடியாது இராணுவம் அறிவிப்பு

தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் மாகாணசபைகள் தலையீடு செய்ய முடியாது என இராணுவம் அறிவித்துள்ளது.

மத்திய அரசாங்கம்மட்டுமே நாட்டின் தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் தீர்மானங்களை எடுக்க முடியும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

வடக்கில் காணி சுவீகரிப்பு மற்றும் இராணுவ முகாம்கள் அமைப்பது தொடர்பில் தமக்கு அறிவிக்கப்பட வேண்டியது அவசியமானது என வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் குறிப்பிட்டிருந்தமைக்கு பதிலளிக்கும் வகையிலேயே இராணுவப் பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் மத்திய அரசாங்கம் மட்டுமே தீர்மானிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் மத்திய அரசாங்கமே தீர்மானங்களை எடுப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எமது யதார்த்த பூர்வ அரசியல் தீர்வை ஏற்றுக்கொண்டுள்ளார் சம்பந்தன்

## வரவேற்கிறது ஈ.பி.டி.பி.

(யாழ்ப்பாணம்)

உணர்ச்சிப் பேச்சுக்களாலும் வெறுக் கோசங்களாலும் அரசியல் தீர்வை அடைய முடியாது என்றும், நடைமுறை யதார்த்த வழியிலேயே தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் இரா.சம்பந்தன் வவுனியா வில் நடைபெறும் இலங்கை தமிழரசுக் கட்சியின் 15ஆவது தேசிய மாநாட்டில் கூறியிருப்பதோடு கடந்த காலங்களில் அரசியல் உரிமைப்பிரச்சினையை தீர்ப்பதற்கு கிடைத்திருந்த பல நல்ல வாய்ப்புக்களையும் இழந்திருக்கின்றோம் என்பதையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

இது ஈ.பி.டி.பி.யினராகிய எமது நீண்டகால அரசியல் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டதன் வெளிப்பாடேயாகும் ஆகவே நாம் அதனை வரவேற்கின்றோம் இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி விடுத்திருக்கும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக்கட்சி தலைவராக தெரிவானார் மாவை

### செயலராக துரைராஜசிங்கம்

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, செயலாளராக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கி.துரைராஜசிங்கம் தெரிவாகியுள்ளதுடன் செயற்குழுத் தலைவராக இரா.சம்பந்தன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இணை பொருளாளர்களாக அன்ரனி ஜெகநாதன் மற்றும் இரட்ணசபாபதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

செயற்குழுத் தலைவராக இரா. சம்பந்தனும் சிரேஷ்ட துணைத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கடலுக்கடியில் கஞ்சா பொலிஸாரால் மீட்பு

பேசாலைக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான கடற்பரப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 18 கிலோகிராமுக்கும் மேற்பட்ட கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்கரையிலிருந்து சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு இலங்கையை கோருகிறார் அல்ஹீசெய்ன்


ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு முன்னெடுக்கும் இலங்கை மீதான சர்வதேச விசாரணை குறித்த தனது நம்பிக்கையையும், அர்ப்பணிப்பையும் புதிய மனித உரிமை ஆணையாளர் வெளியிடவுள்ளார். மேலும் இலங்கை அரசாங்கத்தை இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு அவர் கோரவுள்ளார் என ஐலன்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 27 ஆவது அமர்வின் போது அவர் ஆற்றவுள்ள உரையில் மேற்கண்டவிடயங்களை வலியுறுத்தவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவினால் ஆணைவழங்கப்பட்ட இலங்கை குறித்த விசாரணைக்கு நான் அதிகளவு முக்கியத்துவத்தை வழங்குவேன்-. இந்த விசாரணைகள் குறித்து மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வாய்மூல அறிக்கையொன்றை வெளியிடும்,

நீதி மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றின் நலனை கருத்தில்கொண்டு இலங்கை அரசாங்கத்தை இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(19) ஆம் பக்கம் பார்க்க




## உருளைக்கிழங்கு இறக்குமதிக்குத்தடை

உருளைக்கிழங்கு இறக்குமதி நேற்று நள்ளிரவு தொடக்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

சிறுபோகத்தின் மூலம் பெறப்பட்டுள்ள உருளைக்கிழங்கு அடுத்த வாரத்துக்குள் சந்தையில் விற்பனை செய்யப்படவுள்ளதால், இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கிற்கு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடகப் பிரிவின் பணிப்பாளர் எம்.ஜி. ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் உள்ளூர் உருளைக்கிழங்கு செய்கையாளர்களை பாதுகாக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சுங்கப் பிரிவிற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

உள்ளே... 2013/2014 கல்வியாண்டுக் கான பல்கலைக்கழக அனுமதி மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி விபரம்

# இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை சித்தி விநாயகர் ஆலயத்தின் இரதோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. நாளை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

---

நவாலி சந்திராயன் முருகமூர்த்தி ஆலயத்தின் இரதோற் ச்வம் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது நாளை காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (104)

# முகமாலையின் சில பகுதிகளில் வருட இறுதிக்குள் மீள்குடியேற்றம்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



முகமாலையில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதியில் மக்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின் றோம் அதனடிப்படையில் இவ் வருடத்தின் இறுதிக்குள் குறித்த பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெறும். என நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற முக மாலை கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றம் தொடர்பிலான கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

முகமாலையில் இது வரை மீள்குடியேற்றப் படாத பகுதி மக்கள் தமது சொந்த நிலங் களில மீள்குடியேற வேண்டும் என்ற ஏக்கத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின ஆதங்கங்களை நாம் புரிந்து கொள்கின்றோம் இதேவேளை அம்மக்களை விரைவாக மீள் குடியேற்றம் செய்ய வேண்டும் என்பதில் நாம் மிகுந்த கரிசனையும் அக்கறையும் கொண்டுள்ளோம். இருப்பினும் அப் பகுதியில் மிகச் செறிவாக விதைக்கப்பட்டிருக்கும் கண்ணி வெடிகளை அகற்றுவதில் அங்கு பணியில் ஈடுபட்டிருக்கும் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் பெரும் சவால்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஆபத்துக்கள் நிறைந்த அந்தப்பகுதிகளில் மக்களை முடியமர்த்துவதென்பது சாத்தியமற்றது எனவே கண்ணிவெடியகற்றப்பட்டு பாதுகாப்பான பிரதேசம் என்ற உத்தரவாதம் கிடைக்கப்பெறும் வரை அப்பகுதி மக்களின் நடமாடங்களுக்கு அச்சுறுத்தலான பகுதியாகவே காணப்படும்.

இந்நிலையில் முகமாலை இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய மீள்குடியேற்றப்படாத பகுதிகளைச்சேர்ந்த மக்களில் முகமாலையில் 103 குடும்பங்களைச்சேர்ந்த 339 பேரும், இத்தாவிலில் 10குடும்பங்களைச் சேர்ந்த 39பேரும் மற்றும் வேம்பொடுகேணியில் 130 குடும்பங்களைச்சேர்ந்த 842 பேரும் மீள்குடியேற்றத்திற்காக விண்ணப்பித்துள்ளனர் இவர்கள் தற்போது யாழ்ப்பாணம்,வவுனியா, மன்னார், கிளிநொச்சி,கொழும்பு; திருகோணமலை முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தற்காலிகமாக வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களை துரிதமாக மீள்குடியேற்றி அவர்களுக்கான வீட்டுத்திட்டம் உட்பட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என் பதற்காக நாம் முயற்சித்து வருகின்றோம். அதற்கமைவாக முகமாலையில் ஏ9 வீதிக்கு வடக்காக கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட பகுதியில் மக்களை மீள்குடியேறுவதற்கான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம் அதனடிப்படையில் இவ்வருடத்தின் இறுதிக்குள குறித்த பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெறுவதுடன் முகமாலையின் இந்திராபுரத்தில் அடுத்த கட்டமாக முன்னுரிமைப்படுத்தி கண்ணிவெடி அகற்றப்படும் எனவும் குறிப்பிட்டார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலின்போது பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் மற்றும் இராசதுரை ஆகியோரும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெயராணி, பிரதேச செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் அருட்செல்வம்,கலோரஸ்ட் கண்ணிவெடியகற்றும் பரிவின் பிரதிநிதிகள் மற்றும் கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

## விற்பனைக்கு

சோலர்-DC மின்சாரத்தில் இயங்கக்கூடிய கணனிகள் (ரூபா 20,000) T4 computers (CPU/ரூபா 6500) TRT moniter ரூபா 1500 என்பன விற்பனைக் குண்டு

தொடர்பு-
ஜனாகொம்பியூட்டர்
கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக
கிளிநொச்சி
0777 508 908

(C/3509)

## செயலாளர் நியமனம்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளராக முகாமைத்துவ உதவியாளர் தரம் II இனை சேர்ந்தவரும் வவுனியா கல்வித் திணைக்களத்தில் பணியாற்றியவருமான மா.மகாதேவன் நேற்று முன்தினம் (5.09.2014) கடமையை பொறுப்பேற்றுள்ளார்.

(92)

## தவறிவிட்டது

கைதடி கிழக்கு, கைதடியைச் சேர்ந்த அருமைநாதன் அசோகத் ஆகிய எனது தேசிய் அடையாள அட்டை (832391417V) சாரதி அனும திப்பத்திரம் (B 1602207), காப்புறு திப்பத்திரம் வாகன வரிப்பத்திரம், என்பன வல்லை வெளிக்கும் நெல்லியடிக்கும் இடைப்பட்ட இடத்தில் 30.08.2014 அன்று தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் 0778332928 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (C/3505)

## தொண்டர் தேவை

தற்கொலைச் செய்திகள் உங்களை வருத்துகின்றனவா? முன்பின் தெரியாதோருக்கும் உதவத் தயாரா எம்முடன் ஒரு தொண்டராக இணையுங்கள். வாரத்தில் ஒரு நாள் மட்டும் நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் இன்றிப் பணியாற்ற வேண்டும். பயிற்சி வழங்கப்படும் காலை 9.00-பி.ப. 1.00இடையில் அழையுங்கள்.
021 222 8117
கைகொடுக்கும் நண்பர்கள்

(R/363)

## டயானா பிளாஸ்ரிக்

*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3727)

## வாழ்க வளமுடன்

பெயர் : சு.யுவேஷ் (ரெட்சன்)
முகவரி : 42/8 மவுண்கார் மேல் வீதி, குருநகர்
அகவை 6 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்




அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**
உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 288 |
| திகதி - | 2014.09.05 |
| வர்ணம் - | நீலம் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

08 15 37 38 G

பரிசுத் தொகை ரூபா. **12,613,860/-** வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரு. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரு. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 16 | 800,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 204 | 204,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 390 | 390,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9509 | 570,540/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5012 | 200,480/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 124339 | 2,486,780/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18139 | 362,780/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 12,613,860/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 6,014,580/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. **12,857,280/-**

**2014.09.09ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்**

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3760)


# முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

புத்தூர் வடக்கு உதயநிலா முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா முன்பள்ளி மைதானத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு தலைவர் திருமதி மு.ராஜ்குமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இணைப்பாளர் இ.ஐங்கரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வ துடன் சிறப்பு விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன், வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் க.துரைசிங்கம், அதிபர் ரி.ராதாகிருஷ்ணமூர்த்தி, கிராமசேவகர் செல்வி தி.குணசீலி ஆகியோர் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கவுள்ளனர். (08)

---

இணுவில் மஞ்சத்தடி, விவேகானந்தா முன்பள்ளி விளையாட்டுப் போட்டி முன்பள்ளி முன்றலில் இன்று மாலை 3 மணிக்கு தலைவர் கே.குகானந்தன் தலைமையில் இடம்பெறும்.

நல்லூர் பிரதேச செயலாளர் பா.செநதில் நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலாதன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ.துரைசிங்கம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பா.மாலினி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கவுள்ளனர்.

# கணனி படவழிவமைப்பாளர் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது கணனி படவடிவமைப்பாளர் கற்கைநெறியை யாழ்ப்பண தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கவுள்ளது. இக் கற்கைநெறி தேசியதொழில் தகைமை (NVQ4) சான்றிதழுக்கான பயிற்சியாகும்.

இக்கற்கை நெறியை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம் (தொ. பே.இல. 0212227949) இல் எதிர்வரும் 12.09.2014 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொளளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆலய சூழலில் கள்ளுத் தவறணை அனுமதியின்றி திறந்து வைப்பு

(கீரிமலை)

கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் வலி: வடக்கு பிரதேச சபையினது அனுமதி பெறப்படாமல் கள்ளுத் தவறணை ஒன்று திறந்து வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் இருந்து சுமார் 50 மீற்றர் தூரத்திலேயே இந்தக் கள்ளுத் தவறணை அமைந்துள்ளதாகவும் ஏற்கனவே இந்தப் பகுதியில் கள்ளுத் தவறணை அமைப்பதற்கு பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில் இவ்வாறு குறித்த பிரதேச சபையினது அனுமதி இல்லாது கள்ளுத் தவறணை திறந்து வைக்கப்பட்டிருப்பது குறித்து வலி வடக்கு பிரதேச சபையினால்காங்கேசன்துறைபொலிஸ் நிலையத்திலும், மது வரித் திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வலி வடக்கு பிரதேச சபையின் தவி சாளர் சஜீவன் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை பனை தென்னை வள கூட்டு அபிவிருத்தியின் கீழே இந்தக் கள்ளுத் தவறணை திறக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# இலவச கண்பரிசோதனை

(திருநெல்வேலி)

நல்லூர் சங்கலியன் மன்றத்தில் இலவசக் கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.ரீ.எஸ். சந்திரகுமார் இச்சிகிச்சையை மேற்கொள்ளவுள்ளார்.

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 2014ஆம் ஆண்டின் சமூக நலத் திட்டத்தின் ஏழாவது கட்டமாக பொது மக்களுக்கான இவ் இலவச கண் சிகிச்சை முகாம் இடம்பெறவுள்ளது.

கணனி மூலம் கண்கள் இலவசமாக பரிசோதிக்கப்பட்டு கண்ணாடிகளும் இலவசமாகவே வழங்கப்படவுள்ளன. இச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது சகலரும் பயன்படுத்திப் பலன் பெற்றுக்கொள்ளுமாறு சங்கிலியன் மன்ற நிர்வாகிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (137)

# பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகள் அன்பளிப்பு



(மாதகல்)

மாதகல் நுணசை மகா வித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகள் மற்றும் கல்வி உபகரணங்கள், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதர் எஸ். தட்சிணாமூர்த்தியால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

பாடசாலை வளாகத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த நிகழ்வில், தூதரக அதிகாரிகள் மார்வா, ஸ்ரீகாந்த், பாடசாலை அதிபர் சிவநேசன் மற்றும் பாட-சாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் பாடசாலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள வறிய மாணவர்கள் கற்கும் பாடசாலையாகும். பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பாடசாலைக்கு மேலும் பல உதவிகள் வழங்கப்படும் எனவும் துணைத் தூதர் தெரிவித்தார்.

இந்த பாடசாலையில் தரம் 4 இல் பயிலும் மாணவி ஒருவர் இந்திய வீட்டு திட்டத்தின் பயனாளியும் ஆவார். தன் பெற்றோர் மற்றும் சகோதரனை இழந்த இவர், தன் அம்மம்மாவின் துணையுடன் வாழ்ந்து வருகிறார் . துணை தூதர் மற்றும் அதிகாரிகள் அந்த மாணவிக்காக கட்டப்படும் இந்திய வீட்டையும் பார்வையிட்டனர். (48)


## காரை நிலா; அறிமுக விழா

சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையின் பத்தாவது ஆண்டு சிறப்பு மலரான காரைநிலா அறிமுகவிழாஇன்று காலை 8.30 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் பண்டிதை யோகலட்சுமி சோமசுந்தரம் தலைமையில் நடராஜா ஞபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வே.தருமரத்தினம் முன்னாள் மருத்துவ பீடாதிபதி வை.பரமேஸ்வரன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

பல அரிய நூல்களைச் சேகரித்து எழுதி, பதிப்பித்தமைக்காக கலாநிதி பண்டிதர் க. வைத்தீசுவரக் குருக்களுக்கும். காரை அபிவிருத்திச் சபையின் மாணவர் நூலக வளர்ச்சிக்குத் தொண்டாற்றியமைக்காக மருத்துவர் சுப்பிரமணியம் நடராசாவுக்கும் விசேட கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும். மேலும் பட்டிமன்றம் உட்பட கலை நிகழ்வுகளும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளன. (10)

# யாருக்கெடுத்துரைப்போம்..?




சில விடயங்களைப் பற்றி அரசியல்வாதிகளிடம் கதைத்தால் அவர்கள் அதுக்குப் பதில் சொல்கிறார்கள் இல்லை.

ஊடகங்களின் தவறுகளைப் பற்றி சுட்டிக்காட்டினால் அவற்றுக்கு பிடிக்குதில்லை.

பொலிஸ்காரரின் பொறுப்பின்மையைப் பற்றி சொன்னால் அவர்களுக்கு பிடிக்குதில்லை.

அரச அதிகாரிகளின்ர தப்பு தண்டாவைப் பற்றி வெளிப்படுத்தினால் அவர்கள் பழிவாங்கப் பார்க்கின்றார்கள்.

ஆஸ்பத்திரியிலுள்ள குறைபாடுகளைப் பற்றி கதைச்சால் மருந்து எடுக்க வா பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லினம்.

பஸ்ஸில் கொண்டக்ரரோ, ட்றைவரோ மரியாதைக் குறைவாக நடத்துகினம், மிச்சக் காசையே ஒழுங்காத் தாங்கோ எண்டால் சண்டைக்கு வருகின்றார்கள்.

பாடசாலைகளின் கல்வித்தரம் போதாதுள்ளது என்றால் பிள்ளையைப் பழிவாங்குகின்றார்கள்.

இப்பிடியே இந்த நாட்டில் என்னமாதிரியான அநியாயம் நடந்தாலும் வாயைப் பொத்திக்கொண்டு இருக்க வேண்டியதுதான்.

இல்லையெண்டால் கண்ணை மூடிக்கொண்டு இருக்கோணும்.

அதுவுமில்லையெண்டால் காதுகளை இறுகப் பொத்திக்கொள்ள வேணும்.

மகாத்மாகாந்தியின் மூன்று குரங்குகளாக நாங்கள் மாறினால்தான் உயிர்வாழலாம் எண்ட நிலைமை உருவாகியிருக்கு.

காந்தி சொன்ன அர்த்தம் வேறு, இஞ்ச நாட்டில நடக்குற கதை வேறு, இப்பிடி எதைப் பற்றியும் வாய்திறக்க முடியாத, கண்கொண்டு பார்க்க முடியாத, காதால் கேட்க முடியாத ஒரு கலாசாரம் எங்கட சமூகத்தில வளர்ந்திருக்குதெண்டால் எங்களின்ரை வாழ்க்கையின்ர சிறப்பைப் பற்றி சொல்லத்தேவையில்லை.

என்ன மாதிரியான அநீதி நடந்தாலும், அக்கிரமம் நடந்தாலும் அவையை எல்லாம் சகிச்சுக்கொண்டே வாழவேண்டியதுதான் இண்டைய விதி.

மிஞ்சி மிஞ்சிப்போனால் ஏதாவது ஒரு அநியாயத்தைப் பற்றி சுட்டிக்காட்டினால் அல்லது தட்டிக்கேட்டால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தண்டிக்கப்படுகின்றார்கள்.

இல்லாவிட்டால் பழிவாங்கப்படுகின்றார்கள்.

எல்லாத்துக்கும் மேலாக அவர்களை துரோகிகள் என்று சிம்பிளாக சொல்லி விடுகின்றார்கள்.

ஜனநாயக நாட்டில் இப்படியெல்லாம் இருக்கிறது சிறப்பு.

படித்தவர்களை அதிகமாகக் கொண்ட தமிழ்ச் சமூகத்தில் பண்பாடு இப்பிடி கொடிகட்டிப் பறக்கிறது.

எல்லா உரிமைகளைப் பற்றியும் பேசுகிற நாங்கள் ஒரு உரிமையையும் மதிச்சு நடக்கிறதாக இல்லை.

ஆனால், எங்களுக்கு சுதந்திரம் வேணும், உரிமை வேணும் ஒடுக்குமுறைகளிலிருந்து மீளவேண்டும், எங்களை நாங்களே, ஆளக்கூடிய அதிகாரம் வேணும் என்டெல்லாம் சொல்லிக்கொண்டே இருக்கின்றனர் பலர்.

சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் பெரிய வேறுபாட்டை வைத்துக்கொண்டு சுதந்திரத்தையும் பெறமுடியாது, விடுதலையையும் பெறமுடியாது, முன்னேற்றத்தையும் காணமுடியாது, வேணுமெண்டால் சுடுகாட்டுக்குத்தான் செல்லமுடியும்

எண்ட படியால்தான் இத்தனை கால போராட்டத்துக்குப் பிறகும் எவ்வளவோ பெரிய தியாகங்களுக்குப் பின்னரும், தமிழ் மக்கள் இன்னும் எதையும் பெற முடியாமல் பிச்சைக்காரர்களைப் போல் இருக்க வேண்டியிருக்கு.

கோமாளிகளைப்போல் பேசவேண்டியும் இருக்கு, இவையெல்லாம் யார்தான் உணருவார். இதையெல்லாம் யாருக்கு எடுத்துரைப்போம்.

வெற்றி நமது தவறுகளை மூடி மறைத்துவிடும். - முதுமொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நல்ல வழியைத் தெரிதல்!

உலகம் முழுவதிலும் உள்ள தகுதியும் திறமையும் வாய்ந்த தேர்ச்சி பெற்ற 700 ஆயிரம் விஞ்ஞானிகளுக்குள், 520 ஆயிரம் பேர் நமது வாழ்க்கையை சீர்குலைக்கும் முயற்சியில் தான் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்களாம்.

அவர்களுள் 180 ஆயிரம் பேர் மட்டுமே மனிதகுலத்தை மேம்படுத்துகின்ற ஆக்கபூர்வமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதாக ஒரு புள்ளிவிபரக் கணக்கு உள்ளது.

விஞ்ஞானிகள் மட்டும் என்றில்லை, சாதாரண பொதுமக்களிலும் தெரிந்தோ தெரியாமலோ நிலைமைகளைச் சீர்குலைக்க உதவிக் கொண்டிருப்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்பதுதானே நமது அனுபவமாக இருக்கிறது.

இல்லையெனில் நம் கஷ்டங்கள் ஏன் முடிவே இல்லாமல் தொடர வேண்டும்? நமக்குள்ள பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கண்டுகொள்ள முடியாமல் வேறு யார் யாரையோ எதிர்பார்த்துக்கொண்டும் குற்றம் சுமத்திக்கொண்டும் இருக்க வேண்டும்?

நமக்கு வேண்டியதைத் தீர்மானித்து அதனைச் சாத்தியப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எண்ணாமல், சாத்தியமில்லாத விருப்பக் கனவுகளிலேயே விடாப்பிடியாக நின்று வாழ்வைச் சீர்குலைக்க நாண்டு கொண்டிருப்பதை வேறு எப்படி விளங்கிக் கொள்வது?

தலைவர்கள் சரியாக நடக்காதபோது மக்களுக்காகக் குரல் தருவதாகச் சொல்லிக்கொள்ளும் ஊடகங்கள் தட்டிக்கேட்க வேண்டும்; நெறிப்படுத்த வேண்டும். அதுவும் நடக்காதபோது மக்கள் மத்தியிலுள்ள சிந்திக்கும் தரப்பினர், படித்தவர்கள், கலைஞர்கள் இங்கு நடைபெற வேண்டியதை எடுத்துரைக்க வேண்டும்.

ஆனால் என்ன நடக்கிறது? சர்வதேச நாடுகளுக்குள் போர் மூண்டு, அதில் ஒரு கன்னைக்கு எங்கள் பிரச்சினை தேவைப்படும்போது, அவர்களை வைத்துக்கொண்டு இலங்கை அரசாங்கத்தை ஒரு ஆட்டு ஆட்ட என்றேனும் நமக்கு வாய்ப்பொன்று வரும் என்று கதை சொல்பவர்களை நம்பிக் காத்திருக்கும் ஏமாளியாக அல்லவா நமது சமூகமே இருக்கிறது!

போத்துக்கல் எழுத்தாளர் யொஸே ஸரமாகோ நாவலில், லாசரஸ் மரணமடைந்து கிடக்கும்போது இயேசு அவனை உயிர்ப்பிக்க முயல்கிறார். அப்போது மரியா மக்தலேனா தடுத்து நிறுத்தி, போதும் அவனை உயிர்ப்பித்து இரண்டுமுறை சாகச் செய்யாதீர்கள் என்கிறாள்.

மக்களுக்கு உணர்ச்சியூட்டி, பகையை உயிர்ப்பித்து, இன்னுமொரு தடவை போரிட்டு அழிவதே நமக்கிருக்கும் ஒரே மார்க்கம் என்ற நிலைக்குத் தள்ளுபவர்களை எதிர்க்காதிருப்பவர்கள் இதை யோசிக்க வேண்டும்.

பகையை மறக்க முடியாமல் இருப்பதுதான் "சர்வதேசத்தால் ஏதாவது நடக்காதா!" என்று 'செயல்மறந்து' நம்மை 'எதற்கோ' காத்திருக்க வைக்கிறது. நம்மிடமுள்ள இந்த 'வரட்டு வீம்பை' நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அவநம்பிக்கைகளையே வெளியிட்டபடி அர்த்தமற்ற தொடர் எதிர்ப்புகளில் நாம் சிதைந்து கொண்டிராமல் அதிலிருந்து வெளிவர வேண்டும். 'பேசுவது' நமது வீரத்திற்கு இழுக்கு என்ற நினைப்பை விட்டொழிக்க வேண்டும்.

தொடர்ந்து ஏமாற்றமடைந்து கொண்டிருந்தாலும் கூட, இயல்பான ஒரு வாழ்வுக்காக நம்பிக்கையோடு மறுபடி மறுபடி அணுகுவதில் பெரிய பாதகங்கள் இருக்காது.

அவநம்பிக்கையோடு விலகிச் செல்லச்செல்ல அழிவுகளின் புதைசேற்றுக்குள்ளேயே நாம் மூழ்கிக் கொண்டிருக்கும் நிதர்சனத்தை விட அது மேலானது.

சமூகத்தை மோசமான விபத்துகளுக்குத் தள்ளிவிடாமலிருக்கும் பொறுப்புணர்வையும் அது காண்பிக்கும். நல்ல வழியை நாம் தேர்ந்துகொள்ள வேண்டும். - ஆசிரியர்

# புலிகளை அழித்த எமக்கு "அல்கொய்தா" எந்த மூலைக்கு?

## – இராணுவப்பேச்சாளர் கேள்வி –

(கொழும்பு)

அதிக பலம்வாய்ந்த விடுதலைப்புலிகள் அமைப்பையே அழித்த எமக்கு "அல்கொய்தா" அமைப்பை துடைத்து அழிப்பது என்பது கடினமான காரியம் இல்லை என்றும் பலம்வாய்ந்த எமது திறமை மிக்க இராணுவத்திற்கு அல்கொய்தா அமைப்பு ஒரு பொருட்டல்ல எனவும் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

அல் கொய்தா அமைப்பின் நடவடிக்கைகளையும் தாக்குதல்களையும் எம்மால் இலகுவாக சமாளிக்க முடியும். இலங்கை இராணுவ கட்டமைப்பு மிகப்பலமானது என்றும் எந்த சாவல்களையும் சமாளிக்கும் திறமை உள்ளதெனவும், விடுதலைப்புலிகளை அழித்த எமது இராணுவத்திற்கு அல்கொய்தா ஒரு சவாலான அமைப்பு இல்லை என இராணுவப் பேச்சாளர் கூறினார்.

# தேர்தல் வன்முறை புரிந்தால் கடும் தண்டனை கிடைக்கும்

## – நடவடிக்கைக்கு ஜனாதிபதி பணிப்பு –

தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக்கோனிடம் ஜனாதிபதி நேற்றுமுன்தினம் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

சில தினங்களில் ஊவா மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

அண்மைய நாட்களாக தேர்தல் வன்முறைகள் மற்றும் விதிமுறை மீறல்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

குறிப்பாக மொனராகல மாவட்டத்தில் அதிகளவான வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவ்வாறான ஓர் நிலைமையில் தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த, பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, ஆளும்கட்சியினரே அதிகளவில் தேர்தல் விதி மீறல்களில் ஈடுபட்டு வருவதாகவும் தேர்தல் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதாகவும் எதிர்க்கட்சிகள் கடுமையான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாணவன் சடலமாக மீட்பு; உறவினர்கள் போராட்டத்தில் குதிப்பு

(தலவாக்கலை)

தலவாக்கலை தமிழ்மகாவித்தியாலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள கொத்மலை நீர்த் தேக்க திட்டத்தில் சிறுவன் ஒருவனின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை மட்டுக்கலையைச் சேர்ந்த சிறுவனைக் கடந்த நான்கு நாட்களாகக் காணவில்லை என தலவாக்கலை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்நிலையிலேயே குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான். சடலமாக மீட்கப்பட்ட சிறுவன தலவாக்கலை சென். பற்றிக்ஸ் பாடசாலையில், க.பொ.த. சாதாரண தரத்தில் கல்விப்பயிலும் 16 வயதுடைய லோகநாதன் சிறிவதனன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளான்.

இதனையடுத்து, சிறுவனைக்காணவில்லையென பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டும் பொலிஸாரின் அசமந்தப போக்குக்கிற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஹட்டன்- தலவாக்கலை பிரதான வீதி போக்குவரத்து பாதையை இடைமறித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.நா.விசாரணையில் சாட்சியமளித்தால் தண்டனை வழங்குவது சாத்தியமா?

## – ஆராய்கிறது அரசு –

ஐக்கியநாடுகள் விசாரணைக் குழுவுக்கு முன்பாக பக்கச்சார்பான வகையில் சாட்சியம் அளிப்பவர்களை தண்டிப்பதற்கு சட்டத்தில் இடம் உண்டா? என்பது குறித்து அரசு இப்போது ஆராய்ந்து வருகிறது.

அரசின் கொள்கைக்கு அமைவாக ஐ.நா.விசாரணைக்கு அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை இவ்வாறு அரசின் அனுமதியின்றி நடைபெறும் இந்த விசாரணையில் சாட்சியம் வழங்குபவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு அரசுக்கு தார்மீக உரிமை உண்டு இந்த தோரணையில் அரசின் சட்ட ஆலோசனை நகர்கிறது. அதே வேளை ஐ.நா. குழுவிற்கு சாட்சியமளிக்க, முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தயாராகி விட்டதாக அறிகின்றோம், அப்படி அவர் சாட்சியமளித்து நாட்டை காட்டிக்கொடுக்க எத்தனித்தால் அரசு என்ற ரீதியில கடும் நடவடிக்கை எடுக்க அரசு ஒரு போதும் தயங்காது.

இவ்வாறு ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐ.நா. குழு விசாரணை ஒரு நம்பிக்கையற்ற விசாரணை, அவர்கள் நாட்டிற்குள் வர அனுமதியோம், ஐ.நா. விசாரணைக் குழு பக்க சார்பானது என்பதால் அரசின் ஆணைப்படி சாட்சியமளிக்கப்பட்டவரை தண்டிக்க எமது அரசு ஆராய்ந்து வருகின்றது என்றார்.

# பரீட்சைகளின் புள்ளித்திட்டம் அனுமதியின்றி கையாளத்தடை

அனுமதி இன்றி கல்விப் பொதுத்தராதர உயர்தர மற்றும் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சைகளின் வினாத்தாள்களுக்கு புள்ளிகள் வழங்கப்படுகின்ற பட்டியலை வைத்திருத்தல், அச்சிடுதல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார இதனை அறிவித்துள்ளார்.

இவ்வாறு புள்ளி வழங்கப்படும் பட்டியலை அச்சிட்ட நிறுவனம் ஒன்று அண்மையில் சுற்றி வளைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான புள்ளி வழங்கும் பட்டியலை வைத்திருப்பவர்கள் தொடர்பில் 0112 78 52 11 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கிடைத்தது முத்திரை வரி

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபைக்குரிய 2010ஆம் ஆண்டுக்கான முத்திரை வரி 84 லட்சம் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது. என்று சபை அறிவித்துள்ளது.

திறைசேரியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு சபையின் அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்துவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. என்றும சபை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# திட்டமிட்டு தமிழ் மக்களை ஏமாற்றுகிறது கூட்டமைப்பு

சங்கர சிவன்

**சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று சம்பந்தன் கொம்பனி கூறிக் கொண்டிருக்க இனப்பிரச்சினை புதுப்புதுப் பரிமாணத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை கூட்டமைப்புத் தலைவர்களுக்கே இல்லை. அவர்களிடம் அந்த நம்பிக்கை இருக்குமானால் எந்த நாடு எவ்வாறான தீர்வைப் பெற்றுத் தரும் என்றாவது சொல்ல வேண்டாமா? சர்வதேசம் இவர்களுக்கு மக்களை ஏமாற்றும் மந்திரம் ஆகிவிட்டது.**

**ஜெனிவா மாநாட்டுத் தீர்மானமும் அதன் சர்வதேச விசாரணையும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு எவ்விதத்திலும் உதவப்போவதில்லை. அந்த முயற்சியில் மேற்கத்திய நாடுகளுக்கு வெற்றி கிட்டினாலும் தோல்வி கிடைத்தாலும் இனப்பிரச்சினை தீர்வில்லாத பிரச்சினையாகவே தொடரும்.**

இனிமேல் சர்வதேசத்துடன் தான் எங்கள் பிரச்சினையைப் பேச வேண்டும் என்கிறார் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன். முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இக்கருத்தை வெளியிட்டார். அதாவது கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்துடனும் மற்றைய கட்சிகளுடனும் பேச வேண்டும் என்று புதுடில்லியில் வைத்துக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி கூறியதற்குப் பின்னர் விக்னேஸ்வரன் இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார். அப்படியானால் கூட்டமைப்பின் சார்பில் மோடிக்கு இவர் பதிலளிக்கின்றாரா?

அண்மைக் காலமாக விக்னேஸ்வரன் அடிக்கடி சர்வதேசம் பற்றிப் பேசத் தொடங்கியிருக்கிறார். அறுபது வருட காலமாக மேற்கொண்ட முயற்சி பலனளிக்காததால் சர்வதேசத்தை நாடுவதாக சில தினங்களுக்கு முன் தும்பளையில் ஒரு நிகழ்வில் அவர் கூறினார். இலங்கையில் தீர்வுக்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டும் பலன் கிடைக்கவில்லை என்று இவர் கூறுவது வேடிக்கையாக இருக்கின்றது.

அறுபது வருடகால முயற்சி பற்றிப் பேசும் விக்னேஸ்வரன் அந்தக் காலப் பகுதியில் இனப்பிரச்சினையின் தீர்வுக்காக அல்லது தீர்வை நோக்கிய நகர்வுக்காக கிடைத்த பல சந்தர்ப்பங்களைத் தமிழ்த் தலைவர்கள் நிராகரித்ததாலேயே இன்றைய அவல நிலை ஏற்பட்டது என்பதை விளங்காமல் பேசுகின்றாரா அல்லது விளங்கிக்கொண்டு விதண்டாவாதம் பேசுகிறாரா என்பது புரியவில்லை.

அறுபது வருட முயற்சிகள் பற்றிப் பேசும் விக்னேஸ்வரன் தான் சார்ந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினையின் தீர்வுக்காக ஏதாவது முயற்சி செய்ததா என்பது பற்றி எதுவும் கூறவில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு துரும்பைக்கூட நகர்த்தவில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்கு எதிரான செயற்பாட்டுடனேயே கூட்டமைப்பு தோற்றம் பெற்றது. அதாவது கூட்டமைப்பின் தலைவர்கள் கூட்டாகச் செய்த முதலாவது அரசியல் பணி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்த அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை எதிர்த்ததாகும். அன்று முதல் புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்று செயற்பட்ட காலத்தில் என்றாலென்ன, புலிகளின் தோல்விக்குப் பிந்திய காலத்தில் என்றாலென்ன அரசியல் தீர்வுக்கு எதிராகவே கூட்டமைப்பு செயற்படுகின்றது. அரசியல் தீர்வில் நம்பிக்கையும் அக்கறையும் உள்ள அரசியல் கட்சிக்குத் தீர்வுத் திட்டமும் அத்தீர்வை அடைவதற்கான அணுகுமுறையும் மிகவும் முக்கியமானவை. கூட்டமைப்பிடம் தீர்வுத் திட்டம் இல்லை. தீர்வுத் திட்டமே இல்லையென்றால் அணுகுமுறை பற்றிப் பேசவும் வேண்டுமா?

தீர்வுத் திட்டமொன்றை அரசாங்கத்திடம் கையளித்திருப்பதாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் இப்போது கூறுகின்றார்கள். இவர்களே இவர்களின் இக்கூற்றைக் கேள்விக்கு உட்படுத்துவதுதான் வேடிக்கை. மங்கள முனசிங்கவின் அறிக்கை, திஸ்ஸ விதாரணவின் அறிக்கை, சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்று மிக அண்மைக் காலம் வரை கூட்டமைப்புத் தலைவர்கள் கூறிவந்தார்கள். அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டுமேயொழிய நாங்களல்ல என்று செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றத்தில் பேசினார். இவையெல்லாம் அரசாங்கத்திடம் தீர்வுத் திட்டத்தைக் கையளித்ததாகக் கூறியதற்குப் பின்னர் பேசப்பட்டவை. அரசாங்கத்திடம் தீர்வுத் திட்டத்தைக் கையளித்திருந்தால் சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளுக்கும் மற்றைய ஆவணங்களுக்கும் அமைவாக அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கூற வேண்டிய அவசியம் என்ன? தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக இப்போது மக்களிடமிருந்து ஆலோசனைகளைக் கோரியிருக்கின்றார்கள். ஏற்கனவே, தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்து அரசாங்கத்துக்கு கையளித்திருந்தால் இப்போது மக்களிடமிருந்து ஆலோசனைகளைக் கோரிப் பெற வேண்டிய அவசியம் என்ன? மக்களிடமிருந்து ஆலோசனைகளைக் கோருவது இவர்களிடம் தீர்வுத் திட்டம் இல்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. உண்மையிலேயே இவர்களிடம் தீர்வுத் திட்டம் உண்டென்றால் அதை ஏன் மக்களுக்கு வெளிப்படுத்தக்கூடாது? மக்களின் பிரச்சினைக்கு மக்களுக்குத் தெரியாத தீர்வா?

சர்வதேசம் பற்றிய நம்பிக்கையை மக்களிடம் வளர்ப்பதன் மூலம் மக்களை ஏமாற்றுகின்றார்கள். சர்வதேசம் இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத் தரும் என்று ஐந்து வருடங்களுக்கு மேலாகக் கூறுகின்றபோதிலும் நம்பிக்கையூட்டக்கூடிய எந்தவொரு நகர்வும் இதுவரையில் இல்லை. எந்தவொரு வெளிநாடும் அரசியல் தீர்வில் தனக்குள்ள அக்கறையை இதுவரை வெளிப்படுத்தவில்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று சம்பந்தன் கொம்பனி கூறிக் கொண்டிருக்க இனப்பிரச்சினை புதுப்புதுப் பரிமாணத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை கூட்டமைப்புத் தலைவர்களுக்கே இல்லை. அவர்களிடம் அந்த நம்பிக்கை இருக்குமானால் எந்த நாடு எவ்வாறான தீர்வைப் பெற்றுத் தரும் என்றாவது சொல்ல வேண்டாமா? அந்த நம்பிக்கை இவர்களிடம் இல்லை. அதனால்தான் எந்த நாடு எவ்வாறான தீர்வைப் பெற்றுத் தரும் என்று இவர்களால் சொல்ல முடியவில்லை. சர்வதேசம் இவர்களுக்கு மக்களை ஏமாற்றும் மந்திரம் ஆகிவிட்டது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அதே மக்களை ஏமாற்றுவார்களா என்று அப்பாவித்தனமாக யாராவது கேட்கக்கூடும். இதுதான் இரட்டை முக அரசியல். கூட்டமைப்பின் இரட்டை முக அரசியலைப் பெரும்பாலான தமிழ் மக்கள் புரிந்து கொள்ளாமலிருப்பது தமிழினத்தின் துரதிஷ்டம்.

முள்ளிவாய்க்காலில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும் பல புலம் பெயர் அமைப்புகள் புலிகளின் பதிலிகளாக தனிநாட்டு நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுகின்றன. இலங்கையில் அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற நிலை தொடர்வது தனிநாட்டுக்கான ஆதரவு வளர்வதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் என்ற கனவில் இவை மிதக்கின்றன. இலங்கையில் அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதற்கு எந்த விதத்திலும் இடமளிக்கக்கூடாது என்று புலம்பெயர் அமைப்புகள் கூட்டமைப்புக்கு அறிவித்திருக்கின்றன. இந்த அறிவிப்பை நிராகரித்தால் புலம் பெயர் அமைப்புகளிடமிருந்து கிரமமாகக் கிடைக்கும் பெருமளவு நிதியுதவியும் வேறு வசதிகளும் நின்றுவிடுமே என்பதால் கூட்டமைப்பு புலம் பெயர் அமைப்புகளின் நிலைப்பாட்டுக்கு விசுவாசமாக நடக்கின்றது. அரசியல் தீர்வு பற்றிப் பேசாதிருப்பதும் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்காதிருப்பதும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு பற்றாதிருப்பதும் இந்த விசுவாசத்தின் வெளிப்பாடுகள். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு முகம். இனப்பிரச்சினையின் தீர்வுக்குத் தடையான முகம்.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பதவிகளை அடைந்தவர்கள் அம்மக்களின் பிரச்சினைகளிலிருந்து அறவே விலகியிருப்பது எதிர்காலத்தில் அப்பதவிகளுக்கு ஆபத்தாக முடிந்துவிடும் என்பதால் இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை இருப்பது போல பாசாங்கு செய்கின்றனர். இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் என்ற மந்திரம் இவர்களுக்கு கைகொடுக்கின்றது. அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போய் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதாக பிலிம் காட்டுவதோடு இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையப் போகின்றன என்ற நம்பிக்கையை மக்களிடம் வளர்க்கின்றார்கள். இது கூட்டமைப்பின் மற்றைய முகம். இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை இருப்பது போலப் பாசாங்கு காட்டிக் கொண்டு தீர்வுக்குத் தடையாகச் செயற்படும் முகம்.




தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக கூட்டமைப்பு பின்பற்றும் இரண்டு வழிகளும் தமிழ் மக்களை நட்டாற்றில் கைவிடக்கூடியவை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பது அப்பட்டமான பொய். எந்தவொரு மேற்கத்திய நாடும் இலங்கையின் இனப்பிரச்சினையிலோ அதன் தீர்விலோ இதுவரை எவ்வித அக்கறையையும் வெளிப்படுத்தவில்லை. ஜெனிவா மாநாட்டுத் தீர்மானமும் அதன் சர்வதேச விசாரணையும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு எவ்விதத்திலும் உதவப்போவதில்லை. அந்த முயற்சியில் மேற்கத்திய நாடுகளுக்கு வெற்றி கிட்டினாலும் தோல்வி கிடைத்தாலும் இனப்பிரச்சினை தீர்வில்லாத பிரச்சினையாகவே தொடரும்.

இனப்பிரச்சினையின் தீர்வுக்கு நடைமுறைச் சாத்தியமான வழியைக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு நரேந்திர மோடி சுட்டிக்காட்டிய பின்னரும் விக்னேஸ்வரன் போன்றவர்கள் சர்வதேசம் கைகொடுக்கும் என்றும் சர்வதேசத்துடன் பேச வேண்டும் என்றும் மேடைகளில் பேசுவது இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தவிர்க்க வேண்டும் என்பதில் கூட்டமைப்பு உறுதியாக நிற்பதையே புலப்படுத்துகின்றது.

# அமெரிக்க பருப்பு இங்கு அவியாது

# அழுத்தங்களால் பாதிப்பு இல்லை

## அஜித்நிவாட்கப்ரால் தெரிவிப்பு

(கொழும்பு)


அமெரிக்கா்வின் அழுத்தங்களினால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்கா அழுத்தங்களைப் பிரயோகித்து வரும் நிலையிலும் இலங்கைக்கு போதியளவு வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப்பெறுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரத்தை இரட்டிப்பாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

இந்த ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.8 வீதமாக அமையும் எனவும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தி 150 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



# “எவரும் கைவிடப்படவில்லை”

# தலைநகரில் கண்காட்சி

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டின் எதிர்கால நோக்கிற்கான Future Minds கல்விக் கண்காட்சி நேற்றுமுதல் ஆரம்பமாகி காலி நகர மண்டபத்தில் இடம்பெற்று வருகிறது.

“எவரும் கைவிடப்படவில்லை” என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெறவுள்ள இக்கண்காட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இக்கண்காட்சி மூலம் நாட்டு மாணவர்கள் கல்வியில் ஆர்வமுள்ளவர்கள் தமக்கு விரும்பிய துறைகளைத் தேர்வு செய்து கல்வியில் ஆர்வம் காட்ட முடியும் நிதித்தட்டுப்பாடுகளை கருத்தில் கொள்ளாது தமக்கு விரும்பிய துறைகளைத் தெரிவு செய்ய நல்லதொரு வழிகோலாக அமையும்.

நாளந்தா கனிஷ்ட பழைய மாணவர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்காட்சியில் நாளந்தா கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்து வருகின்றனர்.

# அரச சொத்துக்கள் தேர்தல் பிரசாரத்துக்கா?

## முறைப்பாடு செய்ய வாய்ப்பு

(கொழும்பு)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரச சொத்துக்கள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் அல்லது தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மக்களைக் கோரியுள்ளது.

1996 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளைப் பதிவுசெய்ய முடியும் என ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீப மஹானாமஹேவா குறிப்பிட்டுள்ளார்.

அரச மற்றும் தனியார் பஸ்களை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடாது என அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கியூபா வெளிவிவகார அமைச்சர் இன்று கொழும்பு வருகிறார்

## வலுவடைகிறது உறவு

(கொழும்பு)

கியூபாவின் வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு விஜயம் செய்ய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கியூபாவின் வெளிவிவகார அமைச்சர் புரோனோ ரொட்ரிகோஸ் பெரிலா (Bruno Rodriguez Parrilla) இன்று விஜயம் செய்வார் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைக்கும் கியூபாவிற்கும் இடையிலான ராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 55 ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில், கியூபா வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கியூபாவிற்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தின் போது இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சுசில் பிரேமஜயந்த, கியூப வெளிவிவகார அமைச்சருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.



இலங்கைப் பிரச்சினைகளின் போது கியூபா தொடர்ச்சியாக அளித்து வரும் ஆதரவு வரவேற்கப்பட வேண்டியது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

# இரத்தினக்கல் மாநாடு கொழும்பில் நடாத்த ஏற்பாடு

(கொழும்பு)

சர்வதேச வண்ண இரத்தினக்கல் காங்கிரஸ் (ICA) தனது 16 ஆவது மாநாட்டினை இலங்கையில் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை கொழும்பு சினமன் ஹோட்டலில் நடாத்த திட்டமிட்டுள்ளது.

‘நீலமாணிக்க கற்கள் அதிகம்’ என்ற தொனிப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்படும் இம் மாநாடு இலங்கையில் இடம் பெறுவது இரண்டாவது தடவையாகும். மேலும் இவ்வாறான மாநாட்டினை நாட்டில் நடாத்துவதன் மூலம் மாணிக்ககல் இரத்தினக்கற்களின் விற்பனைக் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும்.

மாணிக்ககற்கள், நீலநிற விலைமதிப்பற்ற கற்களைக் கொண்ட கண்காட்சியொன்றும் அதே இடத்தில் இதையொத்த இந்நாட்களில் ( 15 - 18 ஆம் திகதிகளில்) இடம்பெறவுள்ளது. நடைபெறவுள்ள இம்மாநாடு மற்றும் கண்காட்சிகளில் உலகெங்கிலுமுள்ள கொள்வனவாளர்கள், இரத்தினக்கற்கள் நகைகள் சார்ந்த கல்வியியலாளர்கள், தொழில் சார்ந்தவர்கள், உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள், விற்பனையாளர்கள், எனப்பலரும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கலந்து கொள்ளவுள்ள வர்த்தக நபர்கள் மூலம் தொழில்நுட்ப ரீதியாக, இணையங்கள் மூலமாக மற்றும் நேரடித்தொடர்புகள் மூலமாக தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படும். மாநாட்டின் திட்டமிடல் ஏற்பாடு செய்தலில் சர்வதேச வண்ண இரத்தினக்கல் காங்கிரஸ் (ICA) உடன் இலங்கை தேசிய இரத்தினக்கல் மற்றும் நகை அதிகார சபை (NGJA), இலங்கை இரத்தினக்கல் மற்றும் நகை சங்கம் (SLGJA), ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) ஆகியன ஒன்றிணைந்து பங்காற்றியுள்ளன.

சர்வதேச வண்ண இரத்தினக்கல் காங்கிரஸ் (ICA) இலாப நோக்கற்ற முறையில் சர்வதேச ரீதியில் இயங்கி வரும் ஓர் அமைப்பாகும். உலகம் முழுவதும் 42 நாடுகளினூடாக 500 அங்கத்தவர்களை தன்மகத்தே கொண்டு மாணிக்க கற்கள் விற்பனை கொள்வனவுகளில் 75 சதவீதமளவில் பிரதிபலித்து நிற்கிறது.

# சந்திரிகாவுடன் இரகசிய பேச்சு

## இது பொது வேட்பாளர் தேடும் படலம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவருக்கு மிக நெருக்கமான உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து பேச்சு நடாத்தியுள்ளது என நன்கு தகவலறிந்த வட்டாரங்கள் தெரவித்துள்ளன. இந்தக் குழுவில் திஸ்ஸ அத்தநாயக்க, மங்கள சமரவீர, கபீர் ஹசீம், மலிக் சமரவிக்கிரம ஆகியோரும் இருந்தனர் என நம்பப்படுகின்றது.

இந்த சந்திப்பின்போது ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக சந்திரிகா குமாரதுங்கவைப் போட்டியிடுமாறு கேட்கப்பட்டதாகவும், ஆனால் அதற்கு அவர் பதில் கூறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்தச் சந்திப்பின்போதான பேச்சுக்களில் ஐ.தே.க. குழுவினரின் வேண்டுகோளை சந்திரிகா மறுக்கவும் இல்லை எனக் கூறப்படுகின்றது.

# ஜானகபெரேரா கொலைவழக்கு குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் சிறை

(கொழும்பு)

முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கொலையுடன் தொடர்புபட்டார் என்று சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவருக்கு 20 ஆண்டுகள் கடுழிய சிறைத் தண்டனை விதித்து கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

சண்முகநாதன் சுதாகரன் என்பவருக்கே இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அனுராதபுரத்தில் ஐ.தே.க.வின் புதிய அலுவலகத் திறப்பு விழாவின்போது நடாத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் ஜானக பெரேராவும் அவரது மனைவியும் மேலும் 28 பேரும் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில் 90 பொதுமக்களும் காயமடைந்தனர்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா 1966 இல் இராணுவத்தில் சேர்ந்து 2001 இல் ஓய்வு பெற்றார். ஓய்வுபெற்ற பின்னர் அவர் ஆஸ்திரேலியாவின் இலங்கை தூதுவராக நியமிக்கப்புட்டார். 2008ஆம் ஆண்டில் அவர் ஐ.தே.க. முதலமைச்சர் வேட்பாளராக வட மத்திய மாகாணத்தில் போட்டியிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சவுதி விமான நிலையத்தில் இலங்கையர் எண்மர் கைது

(கொழும்பு)

வீசா பிரச்சினை காரணமாக எட்டு இலங்கையர்கள் சவுதி அரேபியாவின் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த எட்டு இலங்கையர்களும் சவுதி அரேபியாவின் ஜெட்டா விமானநிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேலைவாய்ப்பிற்காக சவுதிக்கு சென்ற சிலரே கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொரளையிலுள்ள தனியார் தொழில் முகவர் நிலையம் ஒன்றின் ஊடாக அவர்கள் சவுதிக்கு சென்றுள்ளனர். கொழும்பு, வரக்காபொல மற்றும் அளுத்கம பகுதிகளைச் சேர்நதவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மாணவர்களின் அறிவை வளர்ப்பது போல் மொழிகளுக்கிடையில் ஒற்றுமையை பேணுவோம்

## யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மொழிகளுக்கிடையே ஓர் ஒற்றுமையை வளர்ப்பதன் மூலம் சமூகங்களிற்கிடையே ஒற்றுமையை நிலை நாட்டலாம். இதற்கு முன்பள்ளிகளும், மொழிச் சங்கங்களும் உறுதுணையாக செயற்பட்டு வருகின்றன. சமூக ஒருமைப்பாடானது குழந்தைகளிடமிருந்தே வளர்க்கப்பட வேண்டும். அவ்வாறு ஓர் அத்திவாரத்திலிருந்து வளர்கப்படும் சமூக ஒருமைப்பாடானது என்றைக்குமே நீண்டு நிலைத்திருக்கக் கூடியது என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற சமூக ஒருமைப்பாட்டு வார நிகழ்வின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

இன, மத, மொழி வேறுபாடின்றி மனிதன் மனிதத் தன்மையுடையவனாக தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப் போது தான் மனிதர்களிடத்தே புரிந்துணர்வு பழக்கம் விருத்தி பெறும் தெரிவித்தார்.

எமது நாட்டிலே தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இம்மொழிகளை நன்கு அறிந்து கொண்டால் அது பல விடயங்களிலும் நமக்குப் பெருந்துணையாக இருக்கும். ஆனால் இந்தியா போன்ற நாடுகளிலே அவ்வாறில்லை. அங்கு ஏராளமான மொழிகள் பேசப்படுகின்றன. அதனால் எல்லா மொழிகளையும் கற்பதென்பது இலகுவானதல்ல. எனவே தான் மொழிச சங்கங்களிற்கூடாக மொழியறிவினைப் போதிப்பதன் மூலம் சமூகங்களிற்கிடையே ஒற்றுமையினை மேம்படுத்திக் கொள்ளலாம். இதற்காக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிறுவர்களின் பள்ளிப்பருவம முன்பள்ளிகளிலே தான் ஆரம்பமாகின்றது. இந்தச் சிறுவர்கள் தான் நாளைய தலைவர்கள் இவர்களிடமிருந்து வளர்க்கப்படும ஒவ்வொரு விடயமும் எதிர்காலத்தில் பெருவிருட்சம் போல் பரந்து வளரும். இதனாலேயே முன்பள்ளிகளின் வளர்ச்சியிலே அதிக அக்கறையும் கவனமும் எடுக்கப்படுகின்றது .என்றார்.(03)

## முரசின் இன்றைய பலன்

(07.09.2014 ஞாயிற்றுக்கிழமை)



ஜய வருஷம் ஆவணி மாதம் 22 ஆம் திகதி.
திரயோதசி / அமிர்தம்.
திருவோண நட்சத்திரம் மு.ப. 08.27 வரை. பின் அவிட்டம்.
இராகு காலம 04.34 - 06.04 வரை. சுபநேரம 09.04 - 10.34 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | ஆரியக் கூத்தாடினாலும் செய்யும் தொழிலில் கண்ணாக இருத்தல் வேண்டும், நட்பு வட்டாரம் கைகொடுத்தமையினால் நிகழ்ச்சிக்கு பணவரவு கிடைத்தல். |
| ரிஷபம் | குடும்பத்தில் நிலவிய நோய் தீர வாய்ப்புக்கிட்டுதல், கொடுக்கல் வாங்கலில் பிரச்சினைகள் உருவாதல். |
| மிதுனம் | டெங்கு ஒழிப்பினை மேற்கொள்ள ஒத்துழைத்தல், சமயோசித புத்தியால் திருட்டு முயற்சி முறியடித்தல். |
| கடகம் | நாட்டின் எல்லையைக் கடக்க முற்பட்டவேளை பிடிபடாமல் காரியசித்தி அடைதல், பிதாவின் நோய் குணமடைதல். |
| சிம்மம் | சுப காரிய நிகழ்வுக்கு பணம் புரட்ட நண்பரை நாடல், நாய் குறுக்கறுத்தவேளை சமயோசித புத்தியினால் விபத்தினின்றும் தப்புதல். |
| கன்னி | நிலுவையின் ஒருபகுதியை செலுத்திப் பிரச்சினை தீர்க்க முயல்தல், பொறுப்பின்றிக் கொடுத்த பணத்தைக் கேட்கச் சென்றவேளை களேபரம் உருவாதல். |
| துலாம் | மேலதிகாரியுடன் சுமுக உறவினைப் பேணியதால் பதவி உயர்விற்கு சிபார்சு செய்தல், கணக்கில் நம்பகத் தன்மை அற்றுப்போவதால் வாழ்க்கையைக் கைவிடல். |
| விருச்சிகம் | பாக்கிய தானத்தில் சனி இருப்பதினால் பிதாவின் நோய் நிலை வேதனை தரல், பாதுகாப்பில் கரிசனை எடுத்தமையினால் திருட்டு ஏற்படாது விடல். |
| தனுசு | தண்டிக்க முயன்றதால் பெற்றோருடன் முரண்பாடு ஏற்பட்டு பின் சுமூக நிலை அடைதல், காலாவதியான வில்லைகளை உட்கொண்டதால் தேக நலம் பாதிப்படைதல். |
| மகரம் | வியாபாரம் செழிக்க புதிய யுக்தியைக்கையாள திட்டமிடல், விவர்க நிறைவேற்றத்திற்கு தடையாக இருந்த பணப்பிரச்சினை மாமனால் அற்றுவிடல். |
| கும்பம் | அவசரக்குடுக்கையினால் ஆவணத்தைத் தவறவிட்டு அல்லற்படல், மின்சாரம் தொடர்பாக அபாய நிலையில் இருந்து விலகுதல். |
| மீனம் | தம்பதியர் மத்தியில் சில நாட்களாக நிலவிய கருத்து வேற்றுமை அகன்றுவிடல், பெற்றோரின் தேகநலம் கருதி வெளியூர் பயணத்தை ஒத்தி வைத்தல். |

## பொதுக்கூட்டம்

(யாழ்.நிருபர்)

மல்லாகம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் புதிய அங்கத்தவர்கள் சந்தாசெலுத்தி தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளமாறும் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

## முதியோர் இல்லம் சென்று கலந்துரையாடினர் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)


யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருட முகாமைத்துவ மாணவர்கள் பதினைந்து பேர் கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு விஜயம் செய்தனர். காலையிலிருந்து மாலைவரை அங்கு தங்கி முதியோருடன் அளவளாவி அவர்களுக்கு சிற்றுண்டிகளும் வழங்கி மகிழ்ந்தனர்.

உளவள ஆலோசனைகளை முதியவர்களுக்கு வழங்கி மாணவர்கள் தாமும் அவர்களிடமிருந்து பயனுள்ள பல ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டனர்.

முதியோர் இல்லத்துக்கு சென்று முதியவர்களுடன் பழகியமை, அவர்களுடன் கலந்துரையாடியமையைத் தங்களால் என்றும் மறக்க முடியாது எனவும், அவை பசுமையாக தமது நினைவுகளில் பதிந்துள்ளதாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

முதியவர்களுடன் ஆடல், பாடல், நகைச்சுவை, கதைகள் கூறல் என்பனவற்றிலும் மாணவர்கள் ஈடுபட்டனர். (137)


## செல்வச்சந்நிதியானுக்கு இன்று சப்பறத் திருவிழா



## அன்னதான கந்தனே!

அன்னதானக் கந்தனே! ஆற்றங்கரை யுறைபவனே
வண்ணக்காவடி சுமந்தே! வருமடியார் கூட்டத்துடன்
எண்ணமெல்லாம் உன் நினைவில் எழுமோசை முருகையா!
பண்ணோடு ஓதி நிற்பர் பரமனே! யருள் தாருமையா!

கவிஞர் சரசாலையூரான்


## சந்நிதியை அடைவோம்!

குஞ்சரங்கள் கட்டிநல்ல காவடிகள் ஆடிடுவோம்
வஞ்சகரை அழிக்கஅவன் வருமழகைப் பார்த்திடுவோம்
பிஞ்சுமுகங் காட்டியவன் பிறப்பறுப்பான் பெற்றிடுவோம்
பஞ்சமிலாச் செல்வநிதி செல்வச்சந்நிதியில் சேர்த்திடுவோம்

துஞ்சுவோரை குன்றிவலவன் தூக்கிவைக்கக் கண்டிடுவோம்
கெஞ்சுவோற்காய் குன்றுவிட்டு இறங்கிடுவான் பணிந்திடுவோம்
நஞ்சுண்டான் மகன்அஞ்சுதல் என்றிடுவான் துணிந்திடுவோம்
பஞ்செனவே மிஞ்சுதுயர் பறக்கவைப்பான் சிறப்புறுவோம்

ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் மூளாய்

## தெல்லிப்பளை துர்க்கையம்மனை கவிதையால் துதிசெய்வோம்



## தாயே சரணம்!

அம்பிகையே ஈஸ்வரியே துர்க்கையே தாயே!
ஆதிபராசக்தியே அன்னபூரணி அம்மா!
நம்பியே உனைத் தொழுதோம் நல்லருள் தாராய்!
நாரணி பூரணி எமக்கருளும் தாரணியே!
தும்பிமுகனும் தம்பியும் கூடவே அருகில் வர
தூய காட்சி தரும் துர்க்கா தேவியே!
வெம்பியழுது நாம் வேதனையில் மாளாமல்
திருவருள் புரிவாய் தாயே சரணம்! சரணம்!!

அம்பிகை அன்பன்

(தெல்லிப்பளை துர்க்கையம்மனுக்கு இன்று தீர்த்தத் திருவிழா)




## கலப்பு இரட்டையரில் சானியா ஜோடி சம்பியன்

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

நியூயோர்க்கில் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், இந்தியாவின் சானியா மிர்சா, பிரேசிலின் புருனோ சோரஸ் ஜோடி, அமெரிக்காவின் அபிகைல் ஸ்பியர்ஸ், மெக்சிகோவின் சான்டியாகோ கான்சலேஸ் ஜோடியை எதிர்கொண்டது. முதல் செட்டை 6-1 எனக் கைப்பற்றிய இந்திய-ஸ்பெயின் ஜோடி, 2ஆவது செட்டை 2-6 என இழந்தது. பின் எழுச்சி கண்ட சானியா ஜோடி, சூப்பர் டை பிரேக்கர் சுற்றில் 11-9 என வென்றது. முடிவில் சானியா-புருனோ ஜோடி 6-1, 2-6, 11-9 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இதன்மூலம் கிராண்ட்ஸ்லாம் அரங்கில், கலப்பு இரட்டையரில் சானியா வென்ற மூன்றாவது பட்டம். ஏற்கனவே இவர், அவுஸ்ரேலிய (2009), பிரெஞ்ச் (2012) ஓப்பன் கலப்பு இரட்டையரில் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# பைனலில் பலப்பரீட்சை



அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் மற்றும் வோஸ்னியாக்கி ஆகியோர் பலப்பரீட்சை நடாத்தவுள்ளனர். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனும் உலகின் முதல் நிலை வீராங்கனையுமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 17ஆம் நிலை வீராங்கனையான மகரோவா (ரஷ்யா) மோதினார்கள்.

இதில் செரீனா 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார். 5 முறை அமெரிக்கா ஓப்பன் பட்டத்தை வென்ற (1999, 2002, 2008, 2012, 2013) அவர் 8ஆவது முறையாக இறுதிப் போட்டியில் நுழைந்து முத்திரை பதித்தார்.

செரீனா வில்லியம்ஸ் இறுதிப்போட்டியில் 10ஆம் நிலை வீராங்கனையான கரோலின் வோஸ்னியாக்கியை (டென்மார்க்) சந்திக்கிறார்.


| SURVEYING SCIENCE | 0.6571 |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION # | NQC |
| TOURISM & HOSPITALITY MANAGEMENT | 1.5759 |
| TOWN & COUNTRY PLANNING | 1.2232 |
| TRANSLATION STUDIES # (KELANIYA & SABARAGAMUWA) | NQC |
| TRANSLATION STUDIES # (University of Jaffna) | 1.5492 |
| TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 0.8988 |
| UNANI MEDICINE & SURGERY | 0.6610 |
| VETERINARY SCIENCE | 1.1475 |
| VISUAL & TECHNOLOGICAL ARTS # (Swami Vipulananda Institute) | 0.6750 |
| VISUAL ARTS # (University of the Visual & Performing Arts) | NQC |


## District: Trincomalee

| Course Name | Z-Score |
|---|---|
| AGRIC BUSINESS MANAGEMENT | 0.7570 |
| AGRICULTURAL RESOURCE MANAGEMENT & TECHNOLOGY | 0.7862 |
| AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.3191 |
| AGRICULTURE | 0.8518 |
| ANIMAL SCIENCE # | 0.5685 |
| ANIMAL SCIENCE & FISHERIES (University of Peradeniya) | 0.8202 |
| APPLIED SCIENCES (PHY.SC) | 0.4824 |
| APPLIED SCIENCES (BIO.SC) | 0.7330 |
| AQUATIC RESOURCES TECHNOLOGY # | 0.1701 |
| ARABIC LANGUAGE * | 0.7310 |
| ARCHITECTURE # | 0.6442 |
| ART & DESIGN # (Ramanathan Academy of Fine Arts) | -0.2028 |
| ARTS (SP) / MASS MEDIA* # | 1.2990 |
| ARTS (SAB) - A * | 1.4209 |
| ARTS (SAB) - B * | 1.5472 |
| ARTS (SP) / PERFORMING ARTS * # | 1.1330 |
| ARTS * | 1.3778 |
| ARTS * | 1.3778 |
| AYURVEDIC MEDICINE & SURGERY | 0.9040 |
| BIOLOGICAL SCIENCE | 0.6131 |
| BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.7741 |
| COMMERCE | 1.2543 |
| COMMUNICATION STUDIES * | 1.3660 |
| COMPUTATION & MANAGEMENT | 1.7687 |
| COMPUTER SCIENCE | 0.9106 |
| COMPUTER SCIENCE & TECHNOLOGY # | 0.6845 |
| COMPUTING & INFORMATION SYSTEMS | 0.7061 |
| DANCE # (Ramanathan Academy of Fine Arts) | 0.3689 |
| DANCE # (Swami Vipulananda Institute) | -0.4522 |
| DANCE # (University of the Visual & Performing Arts) | 0.5072 |
| DENTAL SURGERY | 1.4908 |
| DESIGN (ARCHITECTURE) # | NQC |
| DRAMA & THEATRE # (Swami Vipulananda Institute) | 1.1244 |
| DRAMA & THEATRE # (University of the Visual & Performing Arts) | NQC |
| ENGINEERING | 1.1758 |
| ENGINEERING (EM) | 1.3317 |
| ENGINEERING (TM) | 1.1230 |
| ENTREPRENEURSHIP & MANAGEMENT # | 1.1803 |
| ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | 1.1638 |
| ESTATE MANAGEMENT & VALUATION | 1.8075 |
| EXPORT AGRICULTURE # | 0.4462 |
| FACILITIES MANAGEMENT | 1.6974 |
| FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT # | NQC |
| FISHERIES & MARINE SCIENCES (University of Ruhuna) | 0.9756 |
| FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT | 1.1942 |
| FOOD SCIENCE & NUTRITION | 1.4648 |
| FOOD SCIENCE & TECHNOLOGY | 1.2651 |
| GREEN TECHNOLOGY | 1.0357 |
| HEALTH PROMOTION | 1.1499 |
| HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT # (Uwa Wellassa University) | 1.1530 |
| INDUSTRIAL INFORMATION TECHNOLOGY # | 1.3331 |
| INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | 0.9401 |
| INFORMATION & COMMUNICATION TECHNOLOGY # | 0.7699 |
| INFORMATION SYSTEMS # (University of Colombo School of Computing) | 0.7674 |
| INFORMATION TECHNOLOGY (University of Moratuwa) | 1.1596 |
| INFORMATION TECHNOLOGY & MANAGEMENT | 1.7229 |
| ISLAMIC STUDIES * | 1.2070 |
| LANDSCAPE ARCHITECTURE # | NQC |
| LAW | 1.8639 |
| MANAGEMENT | 1.3043 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY # (University of Kelaniya) | 0.8175 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) | 1.6639 |
| MANAGEMENT STUDIES (TV) - A | 1.2509 |
| MANAGEMENT STUDIES (TV) - B | 1.6232 |
| MEDICAL LABORATORY SCIENCES | 1.4020 |
| MEDICINE | 1.5080 |
| MINERAL RESOURCES & TECHNOLOGY # | 0.5602 |
| MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | 1.4708 |
| MUSIC # (Swami Vipulananda Institute) | -0.3755 |
| MUSIC # (University of the Visual & Performing Arts) | NQC |
| MUSIC # (Ramanathan Academy of Fine Arts) | 0.3236 |
| NURSING | 1.0553 |
| PALM AND LATEX TECHNOLOGY & VALUE ADDITION # | -0.0172 |
| PEACE & CONFLICT RESOLUTION * | 1.8033 |
| PHARMACY | 1.3689 |
| PHYSICAL EDUCATION # | 0.8370 |
| PHYSICAL SCIENCE | 0.2845 |
| PHYSIOTHERAPY | 1.3832 |
| PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.8309 |
| QUANTITY SURVEYING | 1.0982 |
| RADIOGRAPHY | 1.4145 |
| SCIENCE & TECHNOLOGY # | 0.8190 |
| SIDDHA MEDICINE | 0.7296 |
| SOFTWARE ENGINEERING | 0.9766 |
| SPEECH & HEARING SCIENCES | 1.7691 |
| SPORTS SCIENCES & MANAGEMENT # | 0.6202 |
| STATISTICS & OPERATIONS RESEARCH | 0.8649 |
| SURVEYING SCIENCE | 0.9035 |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION # | 0.2016 |

(தொடரும்....)

# நவீன விவசாய முறைகளை விவசாயிகள் கையாள வேண்டும்

– வடமாகாண உறுப்பினர் தவநாதன் ஆலோசனை –



எமது விவசாயிகளும் நவீன விவசாய முறைகளைக்கையாள வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சின்னப் பல்லவராயன் கட்டில் விவசாயி களுக்கு விவசாய உபகரணங் களை வழங்கிவைத்து உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

அங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில்.

எமது மக்கள் இன்று பாரம் பரிய விவசாய முறைகளையே கையாண்டு வருகின்றனர் அதற் காக அவர்கள் மிக அதிகளவான நீரைப் பயன்படுத்த வேண்டிய நிலையிலும் உள்ளனர். ஆனால் எமது நாட்டைவிட கல்வி அறி வில் பின்தங்கிய நாடுகள்மற்றும் பாரம்பரிய விவசாய நாடுகள் எல்லாம் இன்று நவீன விவசாய முறைகளைப்பின்பற்ற ஆரம் பித்து விட்டனர். அதனால் அவர் கள் மிக அதிகளவான உற்பத் திகளை இலகுவாக மேற் கொண்டு வருகின்றனர். ஆனால் கல்விஅறிவும் மற்றும் ஏனை விடயங்கள் சார்ந்த அனுபவ அறிவும் அதிகமாகக் கொண்டுள்ள எமது மக்கள் இன்றும் பாரமபரிய விவசாய முறைகளிலேயே அதிக நாட்டம் கொண்டுள்ளமை வருந் தத்தக்கது. இதனால் வறட்சி ஏற்படும் காலத்தில் அவர்களின் விவசாய நடவடிக்கைகள் முற் றாக முடங்கிப்போகின்றன எனவே எமது மக்களுக்கும் நவீன விவ சாய முறைகளை பின்பற்ற வேண்டும். ஆனால் அந்த விழிப்புணர்வை எமது கல்வி யியலாளர்களும் அரசியல் வாதி களும் ஏனைய சமூகத்தலை வர்களும் மக்களிடையே ஏற்ப டுத்த தவறிவிட்டனர். எனவே எதிர்காலத்தில் மாற்று பயிர்ச் செய்கை முறைகளை மக்கள் கையாள வேண்டும்

எமது நாடாளுமன்ற உறுப் பினர் மு.சந்திரகுமார் கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து பகுதி களுக்கும் சென்று எமது மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளையும் அவர்களின் தேவைகளையும் அறிந்து அதை நீக்குவதில் அதிக கரிசனை யுடன் செயற்பட்டு வருகின்றார் அதனடிப்படையில் சின்னப்பல்ல வராயன் கட்டில் காணிகளைப் பெறுவதில் ஏற்படுத்தப்பட்ட நெருகடியைத்தீர்த்து அம் மக்க ளுக்கு வீட்டுத்திட்டங்களை வழங்குவதற்கு ஏற்பாடுகளை செய்த அதேவேளை வீட்டுக் கூரைகளை அமைப்பதில் மக் கள் எதிர்கொண்ட மரம் தொடர் பான பிரச்சினைக்கும் தீர்வினை பெற்றுத் தந்துள்ளார் எனவே பின்தங்கிய பிரதேசமக்களின் தேவைகளையும் அவர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம் என்றார்.

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் சின் னப் பல்லவராயன்கட்டு குளத் தின் கீழ் பயிரிடும் விவசாயி களிடையே மாற்றுப்பயிர்ச் செய் கையை ஊக்குவிக்கும் முகமாக விவசாய உள்ளீடுகள் விவசாய உபகரணங்கள் என்பன வழங் கப்பட்டன.

இதில் தெரிவு செய்யப் பட்ட 48 விவசாயிகளுக்கு முட் கம்பி. மண்வெட்டிகள் மற்றும் பசளைகள் என்புன வழங்கப்பட் டன.

இந்நிகழ்வில் சின்னப்பல்ல வராயன் கட்டு கமக்கார அமைப் பின் தலைவர் கார்திகேசு. உலக உணவு விவசாய தாபனத்தின் விவசாய செயற்றிட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஜெயக்குமார் மற்றும் விவசாயிக்ள எனப்பலர் கலந்து கொண்டனர்

# தொழிற்பயிற்சிகள்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப் பாண மாவட்டத்தில் முழுநேர தொழிற்பயிற்சி கற்கை நெறி களை நடாத்தி வருகின்றது. அத்துடன் பகுதிநேர தொழிற் பயிற்சி நெறிகளாக CISCO இன IT Essential A Microsoft இன் IC 3 டீசல், பெற்றோல், வாகன இயந்திர திருத்துநர், வீட்டு மின் இணைப்பாளர், தொழிற்சாலை மின்இணைப்பாளர், மோட்டார் சைக்கிள் இயந்திரதிருத்துனர், முகம் மற்றும் சிகை அலங்கரிப் பாளர், பெண்கள் மற்றும் சிறு வர்களிற்கான ஆடை வடிவ மைப்பாளர் கற்கைநெறிகளும் ஆரம்பமாகின்றன.

இக்கற்கைநெறிகளைக் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவு களை அலுவலக நேரத்தில் மாவட்டஅலுவலகம் 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.இல (0212227949) அல் லது தொழிற்பயிற்சி நிலையங்க ளில் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# முல்லையில் 3 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கல்



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலா ளர் பிரிவுக்குட்பட்ட மாமூலை, பூதன்வயல், குமுழமுனை ஆகிய மூன்று கிராமங்களுக்கும் புதிதாக மின் இணைப்பு கடந்த புதன் கிழமை வழங்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாத் பதி யுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த கிராமங்க ளுக்கான மின்சார இணைப்பை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாகவே குறித்த மூன்று கிராமங்களுக்கும் மின்சார வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட் டுள்ளன.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் குறித்த கிராமங்களின் அமைப்புக் களின் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக விடுத்து வந்த கோரிக்கையை அடுத்தே மின்சார வசதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சல்லிக்குள் மறைத்து கடத்தப்பட்ட முதிரை மரக்குற்றிகள் மீட்பு

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் சல்லி கற்களுக்குள் மறைத்து டிப்பர் ரக வாகனத் தில் கொண்டு செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகளை நேற்று முன்தினம் கைப்பற்றியதாக மாங்குளம் பொலிஸார் தெரி வித்தனர்.

கனகராஜன் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லப்பட்ட முதிரை மரக்குற்றி களே இவ்வாறு பிடிக்கப்பட்டுள் ளன. இதன்போது வாகன சாரதி வாகனத்தை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறினார்.

20 முதிரை மரக்குற்றிகளை இதன்போது கைப்பற்றியதாக வும், ஒவ்வொரு குற்றியும் 6 அடி நீளமும் 1 அடி விட்டமும் கொண்டதாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

டிப்பர் ரக வாகனத்தினுள் சாரதியின், சாரதி அனுமதிப் பத்திரம் இருந்ததாகவும் அதனை கொண்டு சாரதியை கைது செய்யவுள்ளதாகவும் பொலி ஸார் மேலும் கூறினர்.

# பார்வையற்றோருக்கு உலருணவு வழங்கல்




பார்வையற்றோர்கள் 150 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர்உணவு பொருட்கள் கடந்த வியாழக் கிழமை வழங்கப்பட்டன.

கிளிநொச்சி பரந்தன் பகுதி யில் அமைந்துள்ள வன்னி பார் வையற்றோர் சங்க அலுவலகத் தில் சங்கத்தலைவர் எஸ். ரூபராஜ் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் வைத்து இந்த உலர் உணவு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

வன்னி பார்வையற்றோர் சங் கத்திலுள்ள அங்கத்தவர்களுக்கு, எழுகை நிறுவனம் சுழற்சி முறையில் இந்த உலர் உணவு பொருட்களை வழங்கி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பனை மட்டைகளுக்கு மண்டைதீவில் கிராக்கி

மண்டைதீவுப்பகுதியில் பனை மட்டைக்குக் கிராக்கி ஏற்பட் டுள்ளது. மண்டைதீவுப்பகுதியில் யுத்தகால நடவடிக்கைகள் கார ணமாக பெருமளவு பனை மரங்கள் அளிக்கப்பட்டதாலும் வீடுகள் நிர்மாணப்பணிகளுக்கு பனைமரங்கள் தறிக்கப்படுவதன் காரணமாகவும் அங்கு பனை மட் டைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இங்கு பனைமட்டை ஒன்று 6 ரூபா முதல் 8 ரூபா வரை விற் பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனை யடுத்து குடியிருப்புகளில் வேலி அமைப்பதற்கும் விவசாய நடவடிக்கைகளின் போது காணி களைச் சுற்றி வேலி அமைப்ப தற்கும் பனைமட்டை பயன்ப டுத்தப்பட்டு வருகிறது. எனவே அங்குள்ள தேவைகளின நிமித்தம் பனைமட்டையை வெளியிடங் களில் இருந்து விலைக்கு வாங்கி எடுத்து வழங்கப்படுவதா கவும் ஒருமட்டை எட்டு ரூபா வரைக்கு விலை கொடுத்து எடுத்து வரப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தென்மராட்சி மற்றும் ஏனையதீவுப்பகுதியில் குறைந்த விலைக்கு பனை மட்டையினை வாங்குகின்ற போதும் எடுத்து வரப்படுவதற் கான கூலியுடன் சேர்ந்தே இந்த விலை போவதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (பர்)

# கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கு முழங்காவிலில் அடிக்கல் நாட்டல்

(முழங்காவில்)

முழங்காவில் கிருஸ்ணாநகர் மாதர்கிராம முன்னேற்றச் சங்கத் தால் நடைமுறைப்படுத்தப்பட விருக்கும் கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையக் கட்டடத்துக்கான அடிக் கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற வுள்ளது.

வடமாகாண மீன்பிடி கிராமிய, உற்பத்தி துறை அமைச்சர் பா. டெனிஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் - விக்கி னேஸ்வரன் கலந்து கொண்டு கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டி வேலையை ஆரம்பிக்க வுள்ளார். 10 இலட்சம் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப் படவுள்ள இத்திட்டத்திற்கு ஏழரை இலட்சம் ரூபா செலவில் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இரண்டரை இலட்சம் ரூபா செல வில் உற்பத்தி செய்வதற்கான இயந்திர கொள்வனவு செய்யப் படவுள்ளதாகவும் சம்மந்தப்பட்ட அலுவலர் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் மழை விவசாய நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நேற்று முன்தினம் மழை பெய்துள்ள மையால் விவசாய நடவ டிக்கைகளுக்கு சாதகமான நிலை உருவாக்கியிருப்பதாக விவ சாயிகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே பெய்தமழை காரணமாக விவசாய நிலங் களை பண்படுத்தும் நடவ டிக்கையில் ஈடுபட்டிருந்த விவ சாயிகள் நெல்விதைப்பு மற்றும விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சாதகமான நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் தீவுப்பகுதி கள் உள்ளிட்ட பகுதிகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கனமழை பெய் துள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. (பா)

பின்வரும் கோவையைப் பார்க்க.

5 ‖ 3 = ‖ # ‖

இங்கு = குறியீடானது சமனைக் கருதுகின்றது நியம கணிதச் செய்கைகளுக்கு ‖, = என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப

19. ‖ என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
(1) கூட்டல் (2) கழித்தல் (3) வகுத்தல்


20. # என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
(1) கழித்தல் (2) பெருக்கல் (3) கூட்டல்

21. மதுவுக்கு ஒவ்வொரு சனியும், ஞாயிறும் லீவு கிடைக்கும், ரதுவுக்கு ஒன்றுவிட்ட ஒரு நாள் லீவு கிடைக்கும். இன்று சனிக்கிழமை. இருவருக்கும் லீவு கிடைத்துள்ளது எனின், பின்வரும் கூற்றுக்களில் மிக சரியானது.
(1) அடுத்த ஞாயிறு இருவருக்கும் லீவு கிடைக்கும்
(2) அடுத்த சனி இருவருக்கும் லீவு கிடைக்கும்
(3) இன்னும் ஏழு நாட்களில் இருவருக்கும் லீவு கிடைக்கும்

22. ஐந்து மனிதர்கள் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு ஐந்து மணித்தியாலங்கள் நடந்து 25 Km தூரம் சென்றனர். எனில் ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதன் சென்ற தூரம் எவ்வளவு?
(1) 5 Km (2) 4 Km (3) 1 Km

23. 8 m நீளமும் 1m உயரமும் உள்ள ஒரு சுவருக்கு பூச 1 லீற்றர் பூச்சு தேவைப்படுகிறது. எனின் 4 m நீளமும் 4 m அகலமும் உள்ள ஒரு சுவருக்கு பூச எத்தனை லீற்றர் பூச்சு தேவை?
(1) 8 லீற்றர் (2) 4 லீற்றர் (3) 2 லீற்றர்

24. முகம் பார்க்கும் கண்ணாடியில் கடிகாரம் தோன்றும் விதம் உருவில் காணப்படுகிறது. இக் கடிகாரத்தின் உண்மை நேரம் என்ன?
(1) 2.55 (2) 3.05 (3) 9.05



பின்வரும் உரையாடலை வாசிக்க.

மாணவர் A :- 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக்போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது தெரியுமா?
மாணவன் B :- தெரியுமே. சீனாவில் தான்.
மாணவன் E :- சீனா ஒலிம்பிக் போட்டிகளைப் பார்த்து உலகமே வியந்து போய் விட்டதாம்.
மாணவன் C :- என்ன காரணம்
மாணவன் D :- சீனர்கள் நவீன முறையில் வடிவமைத்த மைதானங்கள் தான்.
மாணவன் A :- இல்லை. சீனர்களின் கடுமையான உழைப்புத்தான்.
மாணவன் C :- சீனாவின் நவீன தொழிநுட்பவளர்ச்சியும் ஒரு காரணந்தான்.

25. இவ் உரையாடலில் எத்தனை மாணவர்கள் பங்கு பற்றி உள்ளனர்.
(1) நான்கு (2) ஏழு (3) ஐந்து

26. இவ் உரையாடல் எக் கருப்பொருளை மையமாக கொண்டு இடம் பெற்றுள்ளது.
(1) ஒலிம்பிக் போட்டிகள் (2) நவீன தொழிநுட்பம் (3) சீனர்களின் உழைப்பு

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்**



## தரம் - 4 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015


பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு




**01 முதல் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. பின்வரும் பாடலில் விவரிக்கப் பட்டுள்ள பறவையைத் தெரிவு செய்க.
வெள்ளை நிறத்தை உடையது
குளத்தின் கரையில் நிற்பது
நீண்ட சொண்டு உடையது
ஒற்றைக் காலில் நின்றுமே
பெரிய மீன் வரம் கேட்பது




(1) (2) (3)

02. கவிதையில் குறிப்பிடப்பட்ட பழம் என்ன?
முக்கனிகளில் ஒருவன்
முளைத்திட ஒரு வித்துண்டு
தனிப்பழம் இவன் ஆவான்
தாங்கள் விரும்பும் பழம் ஆவான்



(1) (2) (3)

03. தரப்பட்டுள்ள அடைப்புகளில் உள்ள உருக்களைப் பார்க்க ஒவ்வோர் உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் இடப்பட்டுள்ளது




உதாரணத்தை அவதானித்து தொடர்பினை விளக்கி விடையைத் தெரிவு செய்க.
AH
(1) BF, EC, DG (2) DF, BC, EG (3) EC, BG, DF

**பின்வரும் பாடலை வாசித்து 4 ஆம் 5 ம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

"மாறும் சுற்றுச் சூழலிலே
மாசுகள் செய்து கெடுக்காமல்
போற்றும் பொதுச் சொத்து அழிக்காமல்
பேணிக் காப்பது ஒழுக்கம் என்போம்"

04. நாம் அழிக்காமல் போற்ற வேண்டியது
(1) பொதுச் சொத்து (2) ஒழுக்கம் (3) சூழல்

05. சூழல் என்பது
(1) ஊர் (2) மனிதர் (3) சுற்றாடல்

06. "அடாது செய்பவர் படாதுபடுவர்" என்பதன் கருத்து.
(1) நன்மை செய்பவர் துன்பம் அனுபவிப்பர்
(2) சிறுவயதுப் பழக்கம் பெரியவர் ஆனாலும் மாறாது
(3) அநியாயம் செய்தால் துன்பம் நேரிடும்


07. மிகவும் குழப்படியான கமலன் கல்வியில் பின்னடைவான ஒரு மாணவன். இப்போது புதிதாக வந்த கபிலன் மிகவும் கெட்டிக்காரன். இப்போது கமலனும் கபிலனும் நண்பர்கள் மட்டுமல்ல கமலனில் முன்னரை விட சிறியமாறுதல்களும் காணப்படுகிறது.
இந் நிலையை நன்கு வெளிப்படுத்தும் கூற்று.
(1) பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும்
(2) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
(3) பழகப்பழக பாலும் புளிக்கும்

08. கீழே தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் கட்டடமொன்று கட்டத்திட்டமிடப்பட்டது


| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| 1 | நான்கு ஆண்டுகள் |
| 2 | படிமுறை ஒன்றின் 1 மடங்கு |
| 3 | படிமுறை 1 இன் 1/2 மடங்கு |

கட்டடம் 2006 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கப்பட்டது. இக் கட்டடத்தின் இரண்டாவது படிமுறை எத்தனையாம் ஆண்டு நிறைவு பெறும்.
(1) 2018 (2) 2020 (3) 2014

09. பின்வரும் உருவை அவதானித்து வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




10. உருவில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக் மடிக்கப்பட்ட கடதாசித்துண்டை சரியாக வெட்டவேண்டிய விதத்தை தெரிவு செய்க.



(1) (2) (3)




11. கீழே தரப்பட்டுள்ள உரு இரண்டு கடதாசிக் கீற்றுக்களை மடித்து அமைக்கப்பட்டுள்ளது. அதனை அமைக்கப்பயன்படுத்திய இரண்டு கடதாசிக்கீற்றுக்களையும் காட்டுக. விடையைத் தெரிவு செய்க.



I. II.

12. எதிரே உள்ள கனவுருவின் கிடைப்படம் பின்வருவனவற்றுள் எது?



(1) (2) (3)

**பின்வரும் கோட்டுப் படங்களின் உதவியுடன் 13 ஆம் 14 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | ரூபா |
|---|---|
| பென்சில் 1<br>பேனா 1<br>அடிமட்டம் 1 | 35/= |

| | ரூபா |
|---|---|
| பென்சில் 2<br>பேனா 2<br>அடிமட்டம் 1 | 60/= |

| | ரூபா |
|---|---|
| புத்தகம் 1<br>அடிமட்டம் 1 | 40/= |

13. இரண்டு புத்தகங்களின் விலை யாது?
(1) ரூபா 60 (2) ரூபா 30 (3) ரூபா 20

14. ஒரு பென்சிலினதும் பேனாவினதும் விலை யாது?
(1) ரூபா 12.50 (2) ரூபா 25.00 (3) ரூபா 10.00

**வாணி பெண் பிள்ளை, வாணியின் அண்ணாவிற்கு மூன்று பெண் சகோதரிகளும் இரண்டு ஆண் சகோதரர்களும் உள்ளனர்.**

15. வாணிக்கு எத்தனை பெண் சகோதரிகள் உள்ளனர்?
(1) 1 (2) 3 (3) 2

16. வாணிக்கு எத்தனை ஆண் சகோதரர் உள்ளனர்?
(1) 1 (2) 3 (3) 4

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்காக யுனிசெப் நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட தள உருக்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

குறைவு ▷ கூட
கூட ◁ குறைய

| | |
|---|---|
| வட்டம் ▷ சதுரம் | |
| வட்டம் ◁ முக்கோணம் | |

17. இதற்கேற்ப தள உருக்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளது
(1) வட்டம் (2) முக்கோணம் (3) சதுரம்

18. இத்தள உருக்களை கூடியதில் இருந்து குறைந்தது வரை ஒழுங்கு படுத்துடி போது கிடைக்கும் சரியான விடை
(1) வட்டம், சதுரம், முக்கோணம்
(2) சதுரம், வட்டம், முக்கோணம்
(3) முக்கோணம், சதுரம், வட்டம்

# உள்ளூராட்சி நிர்வாகம் வினைத்திறனுடன் செய்வது எப்படி?

## 25 உறுப்பினர்களுக்கு பயிற்சி

வடமாகாணத்தில் இருந்து முதல் தடவையாக உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், உபதவிசாளர்கள், தவிசாளர்கள் கேரளா மாநிலத்தில் இடம்பெறும் பயிற்சி நெறியில் 25பேர் ஆர்வத்துடன் கலந்து கொள்ளவுள்ளர்.

கேரளா கிலா (KILA) உள்ளூர் நிர்வாக பயிற்சி நிறுவனத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி இப் பயிற்சி ஆரம்பமாகி தொடர்ந்து 5 நாட்கள் மிகுப்பயனு றுதி வாய்ந்த சர்வதேச தரத்திலான பயிற்சி நெறியாக அமையும்.

இதில் கேரளமாநிலத்தில் உள்ளூராட்சி முறைகளான கிராமபஞ்சாயத்து, மாவட்டபஞ்சாயத்து, இராஜ்பஞ்சாயத்து, புளொக்பஞ்சாயத்து போன்ற முறைகளை பற்றி ஆராய்வதுடன் பல்வேறு பட்ட பஞ்சாயத்து நடைமுறைகளையும் நேரடி யாக சென்று பார்வையிடும் வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

அதேவேளை எதிர்வரும் 22ஆம் திகதி இந்தியா - கேரள மாநிலத்தில் ஆரம்பமாகவுள்ள பயிற்சி நெறியில் வடமாகாணத்தில் இருந்து 25உறுப்பினர்கள் வடக்கின் 5 மாவட்டங்களிலும் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளனர்.

வடக்கில் கிடைக்கும் இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்துமாறு இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஹே.குணசேகர கேட்டுள்ளார்.

(92)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது

இவ்வாண்டு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு உரிய கொடுப்பனவு அதிகரித்து வழங்கப்படும் என ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

எனவே இவ்வறிவிப்பை உடன் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என வலி.தென்மேற்கு பிரதேசசபை உபதவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் கேட்டுள்ளார்.

நாடுதழுவிய உள்ளூராட்சி சபை உறுப்பினர் களுக்கான கொடுப்பனவு அதிகரித்து வழங்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இதற்கு வடமாகாண உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சார்பில் நன்றியை முழு மனதோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே எமது வடக்கில் உள்ளூராட்சி சபைகள் கலைவதற்கு குறிப்பிடட மாதங்களே உள்ளன. எனவே உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் கொடுப்பனவு அதிகரித்து வழங்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அளித்த வாக்குறுதியை எமது சபை கலை வதற்கு முன்பே வழங்குவது என்பது உண்மையான அபிவிருத்தியாரும் என்றார் சிரேஷ்ட உபதவிசாளர் சின்னத்துரை மகேந்திரன்.

(92)

## தேசியஉற்பத்தித்திறன் விருது

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட 2012/2013 இற்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான போட்டியில் அரச திணைக்களங்களுக்கான பிரிவில் யாழ்ப்பாணம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் பருத்தித்துறை, ஆதாரவைத்தியசாலையும் மூன்றாம் இடத்தைப் பிடித்து விருதுகளைப் பெற்றுள்ளதாக யாழ்.சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் கடந்த வியாழக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

**தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று மிகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்றது.**
**பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் புடைசூழ வேதமந்திரங்கள் ஒலிக்க அம்பாளின் திருத்தேர் வீதியுலா வரும்போது... (63)**



# பதிவிருக்கப் பெட்டகம்

"நெஞ்சைத் தொடும் வார்த்தை ஒன்று சொல்லு?"
"பனியன்..."

*** *** ***

"உங்களுடைய சொந்த ஊர் எது?"
"ஊரையே சொந்தமா வாங்கிற அளவுக்கு நான் பெரிய பணக்காரன் இல்லைங்க... சொந்த வீடுதான் இருக்கு"

*** *** ***

"நீ கடைசியா பார்த்த சினிமா எது?"
"நான் எப்போதும் முதலிலிருந்துதான் சினிமா பார்ப்பேன்..."

*** *** ***

"பந்துவீச்சாளர்கள் பேசினால் எப்படிப் பேசுவார்கள்?"
"ஓவராகப் பேசுவார்கள்"

*** *** ***

"குமார், நீ எதுவரைக்கும் படிக்க ஆசைப்படுகிறாய்?"
"பெல் அடிக்கிறவரைக்கும் சேர்..."

*** *** ***

"நான் ஒரு படம் எடுக்கப்போறேன். நல்ல தலைப்பா ஒன்று சொல்லுங்க!"
"வேற வேலை இல்லையா உங்களுக்கு!"
"அட இது கூட நல்ல தலைப்பா இருக்கே!"

*** *** ***

"எதுக்கு இந்த உலகப்படத்தை வாங்கிக்கொண்டு வருகிறீர்கள்?"
"பையனை உலகமே தெரியாமல் வளர்த்துவிட்டேன் என்று சொன்னீங்களே.."

*** *** ***

"ஏன் அவர் டிக்ஷனரியப் பார்த்துப் பார்த்து சிரிக்கிறார்?"
"அவர் எதுக்குச் சிரிச்சாலும் அர்த்தத்தோடதான் சிரிப்பாராம்."

*** *** ***

"நீ வாங்கிக்கொண்டு வந்த கற்பூரத்தில் வாசனையே இல்லையே ஏன்?"
"சிலருக்கு அதனுடைய வாசனை தெரியாது... விடு."

*** *** ***

"என் பூட்டை உடைத்து 5 லட்சம் பணத்தை திருடிவிட்டார்கள்."
"ஐயோ! பூட்டுக்குள்ளே எப்படி 5 லட்சம் வச்சிருந்தாய்?"

*** *** ***

"இந்த பைக் மணிக்கு எத்தனை கிலோ மீட்டர் வேகத்தில போகும்?"
"மணிக்கு மட்டுமல்ல, யார் ஒட்டினாலும் அறுபது கிலோ மீட்டர் வேகத்துக்கு மேல் போகும்"

*** *** ***

"பஸ்லே சீற் இருந்தும் நின்றுகொண்டே வந்தாயா, ஏன்?"
"எல்லா சீற்றிலேயும் ஆட்கள் இருந்தாங்களே!"

*** *** ***

"என் மகன் எப்பவுமே "கட்டிட்டுவா' என்றால் "வெட்டிட்டு' வந்திடுவான்!"
"ஏன், உங்க மகனுக்கு காது கேட்காதா?"

*** *** ***

"டேய் மச்சான்... ரெண்டு நாளா ஒரே தலைவலி, பல் வலிடா பொறுக்க முடியேல்ல"
"உன்னை யார் மச்சான் தலைவலி, பல்வலியில "பொறுக்க' சொன்னது?"

*** *** ***

"விளையாட்டுக்குக் கூட இதுவரை நான் பொய் சொன்னதேயில்லே!"
"சே! விளையாடுறதுக்கு உனக்கு இண்டைக்கு நான்தான் கிடைச்சேனா?"

*** *** ***

"என்ன ஒவ்வொரு நாளும் குசினிக்குள்ள போய் சீனிப் போத்தலை திறந்து பிறகு மூடிவைச்சிட்டு வாறீங்கள்...?"
"டாக்டர் ஒவ்வொரு நாளும் சுகர் செக் பண்ணச் சொல்லியிருக்கிறார், அதுதான்!"

*** *** ***

"மச்சான் நான் கேள்வி ஒண்ணு கேட்பேன். நீ தெரியும் இல்லாட்டில் தெரியாது என்று சொல்லு"
"சரி... கேள் மச்சான்"
"நீ ஒரு லூஸ் என்று உன் வீட்டில் உள்ளவர்களுக்கு தெரியுமா? தெரியாதா?"

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கொடூரம்

## ஈராக்கில் 35 சடலங்கள் மீட்பு



ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளிடமிருந்து மீட்ட நகரம் ஒன்றில் 35 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சிரியா மற்றும் ஈராக்கில் அரசுப் படைகளை எதிர்த்து தாக்குதல் நடத்தி பல நகரங்களை ஐ.எஸ்.ஐ.எஸ் கைப்பற்றியுள்ளனர்.

ரக்கா நகரை தலைமையகமாகக் கொண்ட இவர்கள் மொசூல் நகரைக் கைப்பற்றி அங்கிருக்கும் கிறீஸ்தவர்கள், யாஸிதி இன மக்களைக் கொன்று குவித்துள்ளனர்.

இந்நிலையில் தலைநகர் பாக்தாத்தின் வடக்கு பகுதியில் உள்ள சுலைமான் பெக் என்ற நகரின் நுழைவாயிலில் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட 35 சடலங்கள் அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இந்த சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக கிர்குக் நகரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

# இடிந்து விழுந்தது சுரங்கம்

## பொஸ்னியாவில் 5 பேர் பலி




போஸ்னியா நாட்டில் ஷெனிகா நகரம் அருகே ரஸ்போடோக்ஜி என்ற இடத்தில் நிலக்கரி சுரங்கம் இடிந்து வீழ்ந்ததில் 5 பேர் பலியாகியுள்ளனர்.

ஷெனிகா நகரிலும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் 3.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் எற்பட்டதில் ரஸ்போடோஜி நிலக்கரி சுரங்கத்துக்குள் இருந்த பாறை வெடித்துள்ளது. இதனால் சுரங்கம் இடிந்தது. இது குறித்து தகவல் அறிந்ததும் மீட்பு பணி துரிதப் படுத்தப்பட்டது. அதில் 500 அடி ஆழத்தில் சிக்கியிருந்த 29 பேர் மீட்கப்பட்டனர். 5 பேரைக் காணவில்லை. அவர்கள் இறந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

இதற்கு முன்பு கடந்த 1982 ஆம் ஆண்டு இதே நிலக்கரி சுரங்கத்தில் இது போன்ற விபத்து நடந்தது. அதில் 39 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

உலகச் செய்திகள்

# நகரத்தையே முடக்கிய பாம்பு



நெதர்லாந்தில் பாம்புக்கு பயந்து ஒரு நகரத்தின் செயற்பாடே முடங்கியுள்ளது. நெதர்லாந்தின் தென் பகுதியில் டிரிம்மெலான் என்ற நகரம் உள்ளது. இது நகராட்சி அந்தஸ்தை பெற்றது.

அதன் அருகேயுள்ள பிரடா நகரில் பாம்புகள் மற்றும் முயல்கள் போன்ற சிறிய மிருகங்களை கண்ணாடி கூண்டுகளில் வைத்து வளர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில், அவ்வாறு வளர்க்கப்பட்ட கொடிய விஷம் கொண்ட நாகபாம்பு ஒன்று அங்கிருந்து தப்பி டிரிம்மெலான் நகருக்குள் புகுந்தது.

அந்த பாம்பு கடித்தால் மரணம் நிச்சயம். ஏனெனில் அது மிக கொடிய விஷம் கொண்டது.

எனவே, அந்த பாம்பைப் பிடிக்க தீவிர ஏற்பாடுகளை நகரட்சி நிர்வாகம் செய்துள்ளது.

அதுவரை பொது மக்கள் எவரும் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என இணைய தளத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனால் பொது மக்கள் தங்கள் வீடுகளில் கதவுகள் மற்றும் ஜன்னல்களைப் பூட்டிக் கொண்டு உள்ளேயே முடங்கி உள்ளனர்.

# முஸ்லிம்களின் எதிரியாக மோடியை காட்ட முயற்சி

## அமெரிக்க தீவிரவாத தடுப்பு நிபுணர் கருத்து



பிரதமர் மோடியை முஸ்லிம்களின் எதிரியாக காட்ட அல்-ஹைய்தா விரும்புவதாக அமெரிக்காவைச் சேர்ந்த தீவிரவாத தடுப்பு பிரிவு நிபுணர் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அல்-ஹைய்தா இயக்கத்தின் கிளையை 'கொய்தத் அல்-ஜிகாத்' என்ற பெயரில் தொடங்கியுள்ளதாக அதன் தலைவர் அய்மன் அல் ஜவஹிரி வெளியிட்ட காணொளி சமூக வலைதளங்களில் செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இதுகுறித்து அமெரிக்காவைச் சேர்ந்த தீவிரவாத தடுப்பு பிரிவு நிபுணரும், முன்னாள் சி.ஐ.ஏ அதிகாரியுமான புரூஸ் ரீடல் கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், அல் கெய்தா தலைவர் அல் ஜவஹிரி காணொளி மூலம் விடுத்துள்ள மிரட்டலை, இந்தியா மிகவும் முக்கியமான விடயமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிரதமர் மோடியை முஸ்லிம்களின் எதிரியாக காட்ட அல்-கெய்தா விரும்புகிறது.

மேலும், லஷ்கர்-இ-தொய்பாவுடன் நெருங்கிய தொடர்புள்ள அல்-கெய்தா இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றும், இதனால் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் அமெரிக்கா, ஆப்கானிஸ்தானுக்கு அளிக்கும் ஒத்துழைப்பை இந்தியா மேலும் அதிகரிக்க வேணடும் எனவும் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீரில் கடும் மழை; வெள்ளத்தில் மூழ்கி 100 பேர் பலி



காஷ்மீர் பகுதியில் பெய்த கனமழை காரணமாக திடீரென வெள்ளம் ஏற்பட்டதில் 100 பேர் பலியாகியுள்ளனர்.

பேருந்து நிலையம், தொலைபேசி நிலையம், மருத்துவமனை எனப் பல முக்கிய இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்த திடீர் வெள்ளம் ஏற்பட 'கிளவுட் பர்ஸ்ட்' காரணமாக இருப்பதாக வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

'கிளவுட் பர்ஸ்ட்' எனும் இயற்கை சீற்றம் பொதுவாக பருவமழை காலத்தில் தான் ஏற்படுகிறது.

அரபிக்கடல் அல்லது வங்கக்கடல் பகுதியில் மையம் கொண்டிருக்கும் மழை மேகங்கள் மேற்கு நோக்கி நகர்ந்து இமாலய பகுதிக்கு மேல் செல்லும் போது வெடித்து பெரு மழை ஏற்படுகிறது.

இதனால், ஒரு மணி நேரத்துக்கு 75 மில்லி மீற்றர் மழை பெய்யும் இதனால் பெரும் வெள்ள பாதிப்பு ஏற்படுவது வழக்கம்.

2009 ஆம் ஆண்டு யூலை மாதம் பாகிஸ்தான் கராச்சி நகரில் ஏற்பட்ட 'கிளவுட் பர்ஸ்ட்' காரணமாக 3 மணி நேரத்தில் 250 மில்லி மீற்றர் அளவு மழை பெய்தது.

இது சராசரியாக ஒரு ஆண்டுக்கு ஏற்படக்கூடிய மழையின் அளவாகும்.

# உள்ளூராட்சி தேர்தல் என்றால் அ.தி.மு.க.அராஜகமே தலைதூக்கும்

## கருணாநிதி குற்றச்சாட்டு

உள்ளூராட்சித் தேர்தல்கள் என்றாலே அ.தி.மு.க.வினரின் அராஜகம்தான் நினைவுக்கு வரும் என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தி.மு.க.தலைவர் கருணாநிதி கேள்வி பதில் வடிவிலான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தற்போது நடைபெறும உள்ளூராட்சி இடைத் தேர்தல்களை தி.மு.க. புறக்கணித்திருப்பதைப் போல, தே.மு.தி.க, பா.ம.க, ம.தி.மு.க, விடுதலைச் சிறுத்தைகள், மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் போன்ற கட்சிகளும் புறக்கணித்துள்ளன.

மத்தியில் ஆளுங்கட்சியாக உள்ள பா.ஜ.க.வும், கம்யூனிஸ்ட் கட்சிகளும்தான் இந்த இடைத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளன. இந்நிலையில் கூட, புதுக்கோட்டையில் நகர்ம்ன்றத் தலைவர் பதவிக்கு பா.ஜ.க., கம்யூனிஸ்ட் உட்பட யாரையும் வேட்பு மனு தாக்கல் செய்யவிடாமல், அ.தி.மு.க.வினர பயங்கர ரகளையில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேல்யும் வேட்பு மனுக்களையே கிழித்தெறிந்திருக்கிறார்கள்.

மேலும், இதுதான் அ்.தி.மு.க. அரசு நடத்துகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல். இதனை முன்பாகவே அறிந்துதர்ன் தி.மு.க.வும், மற்றைய் எதிர்க்கட்சிகளும் இந்தத் தேர்தலைப் புறக்கணித்துள்ளன என்று தெரிவித்துள்ளார்.

### போர் விமானங்களை "ரோபோ" மூலம் அமெரிக்கா இயக்கதிட்டம்

போர் விமானங்களை இயந்திரமனிதன் மூலம் இயக்க அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பெண்டசன் திட்டமிட்டுள்ளது. அமெரிக்க கடற்படையின் எப்.ஏ.டபுள் எக்ஸ் ஜெட் விமானத்தில் இந்த தொழில்நுட்பத்தை பென்டகன் அறிமுகப்படுத்த திட்டமிட்டு வருகிறது. மேலும் அமெரிக்க விமானப் படையின் எப் எக்ஸ் போர் விமானத்திலும் இதை அறிமுகப்படுத்தவுள்ளனர். இந்த புதிய தொழில்நுட்பம் 2030 ஆம் ஆண்டில் அமுலுக்கு வரும் என்று தெரிகிறது.

மனித உருவில் இந்த ரோபோக்களும் கிட்டத்தட்ட மனிதனைப் போலவே செயற்படும் வகையில் வடிவமைக்கப்படுகிறது. மனிதனைப் போன்ற உருவத்தையும் இவைக்கு கொடுக்கவுள்ளனர்.

# அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொடுப்பது எமது இணக்க அரசியல் நிலைப்பாடே

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு





நாங்கள் முன்னெடுத்து வருகின்ற இணக்க அரசியல் நிலைபபாடே இப்பகுதிக்கு அபிவிருத்தி உட்பட மக்களது வாழ்வாதார மேமபாடு உட்பட அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுத்து வருகிறது என அமைச்சர் டக்ளஸ தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகரசபையின் கீழான தீயணைப்புச் சேவை பணியாளர்களுக்கு முதற்கட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு முடிவு பெற்ற நிலையில் நேற்று பயிற்சி வழங்கிய அதிகாரிகளையும் பயிற்சி பெற்ற அதிகாரிகளையும் அமைசசர் சந்தித்து கலந்துரையாடினார்.

மாநகர சபைக்குரிய வளாகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஒருகால கட்டத்தில் போதிய உபகரணங்கள் மற்றும் வசதிகள் இன்றி எமது தீயணைப்புச்சேவை பணியாளர்கள் இயன்றளவில் தங்களது. பணிகளைச் செய்து வந்தனர்.

இப்போது இச்சேவைக்கென புதிய உபகரணங்கள், வாகனங்கள், வசதிகள் அனைத்தும் வழங்கப்பட்டு பணியாளர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவை அனைத்தும் எமது நடைமுறைச் சாத்தியமான இணக்க அரசியல் நிலைப்பாட்டினூடாகவே பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அவர்களுடன் நான் இந்தியா சென்றிருந்த சமயம் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோருடன் கலந்துரையாடியதன் பயனாகவே 50,000 இந்திய வீட்டுத்திட்டம் கிடைததது. இதனை தாம் பெற்றுக் கொடுத்ததாக ஓர் அரசியல் கட்சி கூறியதாகவும் அதனை எமது ஊடகங்கள் செய்தியாக்கி இருந்ததாகவும் அறியக் கிடைத்தது.

அதேபோல் இன்று இந்த தீயணைப்புச் சேவைக்குரிய இவ்வனைத்து உதவிகளும் எமது இணக்க அரசியலின் மூலமே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனை யாரும் சொந்தம் கொணடாட முடியாது.

அந்தவகையில் இவ்வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸவரி பற்குணராசா என்னுடன் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அவருக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவ் உதவிகளை வழங்கிய மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் உள்ளூராட்சி மற்றும மாகாண சபைகள் விவகார அமைச்சர் ஏ.எல்.எம் அதாவுல்லாவுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய தினம் இங்கு பயிற்சியில் ஈடுபட்ட பணியாளர்களின திறமைகளைக் காணக்கிடைத்தது. எனினும் இப்பயிற்சிகளை இவர்கள் மென்மேலும் பெற வேண்டும்.

அத்துடன், கொழும்பிலிருந்து வருகைதந்து இப்பயிற்சிகளை வழங்கி உதவிய திருவாளர்களான மதுசிறி, கலங்சூரிய, நாணயக்கார ஆகியோருக்கும் மாநகர சபை ஆணையாளர் பிரணவநாதன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

இதன்போது பயிற்சிகளை வழங்கிய மூவரும் அமைச்சரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் விசேட விருதும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பரிசளிப்பு விழா

ரதீஸ் பல்பொருள் விற்பனை நிலை யத்தினால் நடத்தப்பட்ட தரம் 5 முன்னோடி புலமைப்பரிசில் பரீட்சை, சித்திரப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை மண்டபத்தில் இடம்பெறுகின்றது.

அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி பிரதம விருந்தினராகவும், வைத்திய கலாநிதி லியோன் புஸ்பராணி, வே.சிவாஜிலிங்கம், சாவகச்சேரி பொலிஸ் பரிசோதகர் டி.வன்னியராச்சி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கிராம அலுவலர் க.வாமதேவன் இலங்கை வங்கி முகாமையாளர் கோ. சேதுகாவலர் பொதுச்சுகாார பரிசோதகர் பி.தளிர்ராஜ், மோகன்தாஸ் சனசமூக நிலையத்தலைவர் செ.தவராசா ஆகியோர கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைக்கின்றனர்.

# ஒருநாள் பயிற்சிப்பட்டறை

'சிந்மய மிசன்' நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் கண்டாவளைக்கோட்டத்தைச்சேர்ந்த 100 மாணவர்களக்கு "வாழ்க்கை என்னும் விளையாட்டு" என்னும் விடயம் பற்றிய ஒருநாள் பயிற்சிப்பட்டறை நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. சிங்மய மிசன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி சியேந்திரஜீ அவர்களால் இப்பயிற்சிப்பட்டறை நடாத்தப்படஉள்ளதாக கண்டாவளைப் பிரதேச சிந்மய மிசன் இணைப்பாளர் தெரிவித்தார் (112)

## கடலுக்கடியில்...

கடலில் மூழ்கடிக்கப்பட்டிருந்த இரண்டு பிளாஸ்டிக் கொள்கலனகளில் இருந்து இந்த கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் இந்தச் சம்பவம் தொடரபாக எவரும் கைது செய்யப்படவில்லை.மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உருளைக்...

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்புரையை நடைமுறைப்படுத்தவுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும் சுங்க சட்டப்பிரிவின் பணிப்பாளருமான லெஸ்லி காமினி குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நா. விசாரணைக்கு....

இலங்கையில் மனித உரிமைப் பணியாளர்கள்; சாட்சிகள், பாதிகக்கப்பட்டவர்கள் தற்போது அச்சுறுத்தப்படுவது குறித்து நான் கவலையடைந்துள்ளேன்.

மேலும் முஸ்லிம்,கிறிஸ்தவ சிறுபான்மையினர் மீதான தாக்குதல் களையும் நான் கடுமையாகக் கண்டிக்கிறேன் என அவர் தனது உரையில் தெரிவிக்கவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் புதிய ஆணையாளர் இலங்கை குறித்து வாய்மொழி மூல அறிக்கை சமர்ப்பிக்க உள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் புதிய ஆணையாளர் இளவரசர் அல் ஹுசெய்ன் இலங்கை தொடர்பில் வாய்மொழி மூல அறிக்கை சமர்ப்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கை தொடர்பில் அல் ஹுசெய்ன் வாய்மொழி மூல அறிக்கை சமர்பிக்க உள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 27ஆவது அமர்வுகளில் இலங்கை தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க இலங்கைக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இளவரசர் அல் ஹுசெய்ன் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்க உள்ள வாய்மொழி மூல அறிக்கையின் பிரதியொன்று முன் கூட்டியே இலங்கைக்கு வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாய்மொழி மூல அறிக்கை சமர்பிப்பதற்கு 24 மணித்தியாலத்திற்கு முன்னத்ாக இவ்வாறு இலங்கைக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் இலங்கை தொடர்பில் நடத்தப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் அனைத்து விபரங்களையும் பகிர்ந்து கொள்ளத் தயாரில்லை என மனித உரிமைப் பேரவை ஆணையாளர் அல் ஹுசெய்னின் பேச்சாளர் ரெர்பர்ட் கொல்வில்லி தெரிவித்துள்ளார்.

விசாரணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் மூவர் அடங்கிய நிபுணர் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்ய வீசாவிற்காக விண்ணப்பித்தார்களா என ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பற்றிய பூரண தகவல்களை வெளியிடாமல் விசா வழங்க முடியாது என இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழரசுக்...

தலைவர்களாக பொன்.செல்வராஜா மற்றும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும் உப தலைவர்களாக திருகோணமலையைச் சேர்ந்த துரைரட்ணசிங்கம், அம்பாறையைச் சேர்ந்த தோமஸ் வில்லியம், வவுனியாவைச் சேர்ந்த வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான எஸ்.பரஞ்சோதி, ஏ.எம்.இமாம் ஆகியோரும், கட்சியின் துணைச் செயலாளராக எம்.ஏ.சுமந்திரன், சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தமிழரசுக் கட்சியின் மகளிர் அணி செயலாளர்களாக அனந்தி சசிதரன், பேராசிரியர் நாச்சியார் ஆகியோர் தெரிவாகினர். நிர்வாகச் செயலாளராக சி.குலநாயகம் தெரிவு செய்யப்பட்டார். சட்டத்துறை செயலாளராக சி.தவராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

கொள்கை பரப்பு செயலாளராக கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவு செய்யப்பட்டபோதிலும் அவர் அதனை மறுத்து, அப்பதவியை கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ். வேளமாலிகிதனை பிரேரித்திருந்தார்.

நேற்று தெரிவு செய்யப்பட்ட நிர்வாக உறுப்பினர்களின் விபரங்கள் இன்று இடம்பெறவுள்ள தேசிய மாநாட்டில் உத்தியோக பூர்வமாக வெளியிடவுள்ளதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

## ஜப்பானிய...

கிறது என ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகள் காணாமற்போனார் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும விசாரணைகள் மற்றும் கண்ணிவெடி அகற்றலில் ஏற்பட்டுள்ள முன் னேற்றம் தொடர்பாகவும் ஜனாதிபதி அகாஷியிடம் எடுத்துரைத் தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அகாஷி இலங்கையில் கண்ணிவெடி அகற்றலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் அசாதாரணமானது. கம்பொடியாவில் இன்றும் கூட கண்ணிவெடி அகற்றிக் கொண்டிருக்கின்றார்கள் எனவே இந்த முன்னேற்றம் தொடர்பாக ஜப்பான் தனது பாராட்டைத் தெரிவித்துள்ளது எனத்தெரிவித்தார்.

## எமது...

ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது தமிழ் பேசும் மககளின் அரசியலுரிமைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நாம் யதார்த்தமான வழிமுறையினையே வகுத்து செயலாற்றி வருகின்றோம்.

இந்த யதார்த்த வழிமுறை மூலமே நாம் அபிவிருத்தி முதற்கொண்டு மக்களின் வாழ்வாதார முயற்சிகளையும் திறம்படச் செய்து வருகின்றோம். அது தவிர நாம் வகுத்துக் கொண்ட நடைமுறை யதார்த்த வழிமுறைதான் எமது மக்கள் இழந்து போன நிலங்களையும் படிப்படியாக மீட்டுத்தந்து கொண்டிருக்கிறது.

உணர்ச்சிப் பேச்சுக்களாலும், வெற்றுக் கோசங்களாலும் எமது உரிமைகளை நாம் பெற்றுவிட முடியாது. மாறாக யதார்த்த வழிமுறை மூலமே நாம் அரசியல் தீர்வு என்ற இலக்கை எட்டி விடமுடியும்.

இதுவரை கால வெறும் உணர்ச்சி பேச்சுக்களும் வெற்றுக் கோசங்களும் எமது மக்களுக்கு அழிவுகளையும், அவலங்களையும் பெற்றுத்தந்ததைவிட எதையும் தந்திருக்க வில்லை.

இதையே நாம் நீண்டகாலாமாகக் கூறியும் வலியுறுத்தியும் வந்திருக்கின்றோம்.

நாம் கூறி வந்த அதே கருத்துக்களை இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் காலம் கடந்தாவது கூற முற்பட்டதை நாம் வரவேற்கின்றோம்.


முன்னரே எமது யதார்த்த வழிமுறையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏற்றுக் கொண்டிருந்தால் எமது மக்களுக்கு இத்தனை அழிவுகளும் அவலங்களும் நடந்திருக்காது.

முன்னரும் சம்பந்தர் அவர்கள் நடைமுறை யதார்த்த அரசியல் குறித்து பல தடவைகள் கூறியிருக்கின்றார்.

ஆனாலும், அவையேதும் நடைமுறையில் சாத்தியப்படுத்தப்படவில்லை. ஆனால், வவுனியாவில் நடைபெற்ற மகாநாட்டில் கூறியிருககின்ற இவ்விடயங்களாவது அர்த்தமானதாகவும் ஆத்மார்த்தமாகவும் செயல்வடிவம் கொடுக்கப்பட்டு சம்பந்தர் அவர்களினால் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அதை ஈ.பி.டி.பி வரவேற்பதோடு தேவையான பங்களிப்புக்களைச் செய்யவும் தயாராகவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏனைய நாடுகளைப் போன்றே இலங்கையுடனான உறவும்

## இந்திய அமைச்சர் வெங்கையாநாயுடு தெரிவிப்பு



இந்தியஅரசாங்கம் ஏனைய நாடுகளுடனான உறவை எவ்வாறு பேணி வருகின்றதோ, அதேபோன்றுதான் இலங்கை அரசுடனான உறவையும் பேணி வருவதாக மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்வொன்றில் கலந்து கொள்ள வந்த அவர் ஊடகவியலாளர்களை சந்தித்து கலந்துரையாடியவேளை இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கை தமிழர்களுக்கு இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளை திறைவேற்ற வேண்டும்

மத்திய அரசைப் பொறுத்தவரை மற்ற நாடுகளைப் போலவே இலங்கை அரசுடனும் நல்லுறவு கொண்டுள்ளது.

இலங்கை பிரச்சினைக்கு தூதரகம் மூலம் அவ்வப்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என அவர் தெரிவித்தார்.

# கருக்கலைப்பு மாத்திரைகள் சுங்கப்பிரிவிடம் சிக்கின





(கொழும்பு)

சென்னையிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட ஒரு தொகை கருக்கலைப்பு மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

விட்டமின்கள் எனக் குறிப்பிட்டு இவ்வாறு கருக்கலைப்பு மாத்திரைகள் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மாத்திரைகளின் பெறுமதி 20 இலட்சம் ரூபா என சுங்கப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

சுங்கப்பிரிவினர் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனியார் பஸ் உரிமையாளர்கள் நாளைமறுதினம் பணிப்பகிஷ்கரிப்பு

## பொலிஸாரின் செயற்பாட்டிற்கு எதிராக

தனியார் பேருந்துகள் மீது நடவடிக்கை எடுத்துவரும் பொலிஸாரின் செயற்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பினை மேற்கொள்ளவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளதாவது.

பொது நீதிக்கு முரணான வகையில் தனியார் பேருந்துகள் தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

எனவே பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நாடுதழுவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இப்பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்து சங்க தலைவர் கெஸ்காதரன் நேற்றிரவு தெரிவித்தார்.

# ஐ.தே.க.பிரதி தலைவராக சஜித் பெயர் முன்மொழிவு

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவின் பெயரை கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

பசறை பொது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 68ஆவது சம்மேளனத்தின்போது கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங் இதனை அறிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ அன்று ஜே.ஆர்.ஜயவர்தன விடுத்த அழைப்பை ரணசிங்க பிரேமதாஸ ஏற்றுக்கொண்டதைப் போன்று ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பை தாம் ஏற்றுக்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாய்மூல அறிக்கை இன்று சமர்ப்பிப்பு

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான ஐ.நா. விசாரணைக்குழுவின் வாய்மூல அறிக்கை இன்று ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஐ.நா.வின் முன்னைய மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விசாரணைக் குழு ஒன்றை நியமித்திருந்தார்.

இந்த விசாரணைக் குழு இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளை தற்போது நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஜெனிவாவில் நாளை ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் 27ஆவது கூட்டத் தொடரில் இந்த விசாரணைகள் தொடர்பிலான தமது வாய்மூல அறிக்கையை ஐ.நா. விசாரணைக் குழு சமர்ப்பிக்கவுள்ளது ஐ.நா விசாரணைக் குழுவினால் இது வரை நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பிலான முழு விபரங்களும் இந்த வாய்மூல அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, ஐ.நா.வின் இந்த விசாரணையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும், இலங்கையில் விசாரணை நடத்த அவர்களுக்கு நுழைவு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# போராட்டம் வேண்டாம் கலந்துரையாட வாருங்கள்

## சப்ரகமுவ மாணவருக்கு அழைப்பு



(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படும் சத்தியாகிரக போராட்டம் தொடர்பில் கலந்துரையாட வருகை தருமாறு உயர் கல்வி பிரதியமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க அழைப்பு விடுத்துள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பதுளை பிரதான வீதியின் பலாங்கொட பம்பஹின்ன மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களை உயர்கல்வி பிரதியமைச்சர் சந்தித்துள்ளார்.

இதன்போது, தங்களது கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாட எதிர்வரும் 10 ஆம் திகதி வருகை தருமாறு சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# மனித பாவனைக்கு பால்மா ஒவ்வாததா?

## கிளம்புகிறது சர்ச்சை

(கொழும்பு)

பால்மா வகைகள் உடலுக்கு ஒவ்வாமையா? என்பது குறித்த சர்ச்சைக்கு உரிய தகவலை பொதுபலசேனா வெளியிட்டுள்ளது. நாட்டில் விற்பனையாகும் பால்மா விஷத்துடன் கூடிய பானம் என பொது பலசேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலாந்த விதானகே தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்போன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

சிறார்களுக்கு சளி நோய் அதிகளவில் ஏற்பட பல்மா வகைதான் காரணமா. என்ற சந்தேகம் இப்போது ஏற்பட்டுள்ளது. என்று அவர் தெரிவித்தார்.

பால்மா உணவு அத்தியசவசியமற்றது. கல்வியும் ஊடகங்களும் பால் அத்தியாவசியமான உணவு என மக்களுக்கு கற்பித்து வலுகின்றன எனவும் டிலாந்த விதானகே குற்றம்சாட்டியுள்ளார்.

# திடீரென பற்றியது தீ மின்கம்பிகள் நாசம்

## யாழ்.முலவை சந்தியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முலவைச்சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற மின்கசிவுத் தீ விபத்தால் மின்வடங்கள் எரிந்துள்ளன.

மின்கம்பத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்கடத்திகளில் ஏற்பட்ட தீயினால் இறப்பர் மின் வடங்கள் தீப்பிடித்து எரியத் தொடங்கின.

தகவலையறிந்து உடன் அங்கு வந்த யாழ்மின்சார சபை ஊழியர்கள் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் தீயை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவந்தனர்.

இதனால் அப்பகுதிக்கான மின் தடை ஏற்பட்டிருந்த போதிலும் மின்சார சபையினரின் உடனடி நடவடிக்கையால் மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

மின்கம்பத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்கடத்தியினுள் மழைநீர் சென்றமையாலேயே தீ ஏற்பட்டுள்ளதாக யாழ்மின் பொறியியலாளர் தெரிவித்தார். (இ)

# வடக்கு உட்பட்ட கடற்பகுதியில் காற்றின் வேகம் அதிகரிக்கும்

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

புத்தளம் தொடக்கம் மன்னார் காங்கேசன்துறை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்கள் சற்று கொந்தளிப்பாக அமையக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

குறித்த பிரதேசங்களில் காற்றின் வேகம் மணிக்கு 70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதேவேளை, கிழக்கு, ஊவா மாகாணங்கள் உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளில் மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தென்மேற்கு பருவக்காற்றின் வேகம் 20-40 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.